நல்லூர் இன் நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 10 (23-01-1994) ஞாயிற்றுக்கிழமை ஓசை 339

## ஆண்டு 2க்கு புதிய பாடத்திட்டம் இவ் வருடத்தில் அறிமுகம்

1993இல் ஆண்டு ஒன்றுக்கு ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடத்திட்டம் 1994 இல் ஆண்டு இரண்டிற்கு விரிவுபடுத்தப்பட இருக்கிறது. இதற்கான அறிமுக விளக்கச் செயலமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8-30 மணிக்குத் தொடங்கி தொடர்ந்து நடைபெற உள்ளது. நல்லூரில் உள்ள யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் இவ் அமர்வு நடைபெறும். யாழ்ப்பாணம் தெற்கு. யாழ்ப்பாணம் வடக்கு ஆகிய வலயங்களைச் சேர்ந்த அனைத்து ஆரம்பக் கல்வி, ஆரம்ப விஞ்ஞான/கணித முதன்மை ஆசிரியர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயப் பணிப்பாளர்கள் செல்வி தி.பெரியதம்பி, திரு. க. கந்தசாமி ஆகியோர் கேட்டுக் கொள்கின்றனர்.

# தீவிர பேரினவாத அமைப்புக்கள் டி.பியுடன் இணைவதில் அக்கறை!

## யுத்தம் புரியும் அரசைப் பலப்படுத்த முயற்சி

(கொழும்பு)

சிறிலங்காவில் உள்ள தீவிர பௌத்த - சிங்களப் பேரினவாத அமைப்புக்கள் பல ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயலாற்ற விரும்புவதாகத் தெரியவருகிறது. இனப்பிரச்சினை தொடர்பாக டி.பி.விஜேதுங்கா எடுத்துள்ள முடிவே இத்தீவிர அடிப்படைவாதிகளின் உற்சாகத்திற்கும், டி. பி. விஜேதுங்காவை தமது தலைவராக ஏற்றுக்கொள்ளும் அளவிற்கும் அவற்றைக் கொண்டு வந்துள்ளமைக்கும் காரணம்என்றும் கூறப்படுகின்றது.

இதன் முதல் கட்டமாக பொதுஜன நிதாஸ் பெரமுனை என்னும் அமைப்பு அரசாங்கத்துடன் இணைந்துள்ளதாகத் தெரியவருகின்றது. டி. பி. விஜேதுங்கா, இலங்கையில்இனப்பிரச்சினை என்பதே இல்லை பயங்கரவாதப் பிரச்சினை உள்ளது என்றதும், இப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே ஒரேவழி எனக் குறிப்பிட்டு பெரும் இராணுவத் தாக்குதலுக்கு தயார் படுத்திவருவதுமே இப் பௌத்த அடிப்படை வாதிகளை டி. பி. விஜேதுங்கா பக்கமாகத்திரும்ப வைத்துள்ளது.

வடக்கு- கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே அவசியம் என கடந்த காலம் முழுதும் குரல் எழுப்பி வரும் இவ் அடிப்படைவாதக் கட்சிகளுக்கு டி. பி. விஜேதுங்காவின்தீவிரபோக்கானது மிகவும் கவர்ந்த தொன்றாகவுள்ளது இந் நிலையில் டி. பி. விஜேதுங்காவின்கையைப் பலப்படுத்தி வடக்கு-கிழக்குப் போரில் வெல்ல வேண்டும் எனவும் இக்கட்சிகள் கருதுவதாகவும் தெரிகின்றது.

## வடக்கு - கிழக்கு யுத்தத்தை வெல்ல ஐ.தே.கவுடன் சேர்ந்து கொள்வோம்

### பொதுமக்கள் சுதந்திர முன்னணி அழைப்பு

(கொழும்பு)

வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதற்கு பல கட்சிகளும், அரசியல் பிரமுகர்களும்போட்டிபோடுவது சிறிலங்கா அரசியலின் முக்கிய அம்சமாக உள்ளதென காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுள்ள புதிய கொள்கையே ஆகும் என்றும் இதனைச் செயற்படுத்துவதற்கு தாம் எல்லோரும் ஒன்றிணைந்து ஐக்கிய தேசியக் கட்சியை மேலும் பலப்படுத்த வேண்டும் எனவும் இன்று தொடர்பாக தீர்வொன்று காணப்படவேண்டும். இதற்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கத்தோலிக்க திருச்சபை

## அதிமேற்றிராணியார்

## றிசேவ் பொலிஸ் கைது

(வவுனியா)

சிறிலங்கா றிசேவ் பொலிஸார் ஒருவர் வவுனியாவில் இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடபகுதிக்கு 200 ரோச் பற்றிகளைக் கடத்த முயற்சி செய்ததாக கூறியே கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் மன்னாரைச்சேர்ந்தவர் எனெ தெரிவிக்கப்படுகிறது.

## மீன்பிடி படகுகள் மீது சூடு; ஒருவர் பலி; இருவர் கைது

### இருவர் நீந்திக் கரை சேர்ந்தனர்

(குருநகர்)

நேற்று முன்தினம் இரவு பூநகரி - பெரிய வேலிக்கு அண்மையில் கடலில் மீன் பிடியிலீடுபட்டு நின்ற மீன் பிடி வள்ளங்களை நெருங்கி வந்த சிறிலங்கா கடற்படை ரோந்துப் படகிலிருந்து சரமாரியாகச் சுட்டதில் மீனவர் ஒருவர் பலியானார்.

அவர் சென்ற குருநகரைச் சேர்ந்த குமரன் என்பவரது படகும், தொழில் உபகரணங்களும் கடலில் படையினரால் தகர்க்கப்பட்டு அழிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதே வள்ளத்தில் தொழிலுக்குச் சென்ற மற்றிரு மீனவர்களான மக்குமஸ், அண்ணா ஆகியோர் நீந்திக் கரை வந்து சேர்ந்தனர்.

அதே வேளை பாசையூரில் இருந்து அப்பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்ற மற்றொரு வள்ளத்தில் சென்ற இரு மீனவர்களை கடற்படையினர் கைது செய்து கொண்டு சென்றனரென்றும் அதனை நேரில் கண்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

குருநகரில் இருந்து பாசையூரில் திருமணம் புரிந்த மனுவேல்பிள்ளை அமலதாஸ் (பெரியதம்பி - வயது 40) என்னும் குடும்பஸ்தரும் அவரது மைத்துனர் உறவினருமான இன்னொருவருமே கடற்படையால் கைது செய்து கொண்டு செல்லப்பட்டவர்களாவர்.

கடற்படையின் தாக்குதலுக்குப் பலியானவர் பருத்தித்துறையிலிருந்து குருநகரில் திருமணம் செய்து கொண்ட சூசைப்பிள்ளை தவக்குமார் (முகிலன் வயது 21) என்னும் இளம் குடும்பஸ்தர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(21), (22)

### ராணுவத்துக்கு தகவல் கொடுத்த

## முன்னாள் ராணுவ சிப்பாய் சுட்டுக் கொலை

(கொழும்பு)

பொலநறுவ மன்னம்பிட்டியைச் சேர்ந்த முன்னாள் சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் கடந்த 14ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

டி. வில்மன் திஸாநாயக்க என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவார். இராணுவ தலைமைப்பீடத்துக்கு தகவல் கொடுக்கின்றார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர் சுட்டுக்கொல்

( 6 ஆம் பக்கம் பார்க்க)

முகர்களும் போட்டிபோடுவது சிறிலங்கா அரசியலின் முக்கிய அம்சமாக உள்ளதென பொதுஜன நிதாஸ் பெரமுனவின் (பொதுமக்கள் சுதந்திர முன்னணி) பொதுச் செயலாளர் ரஜீத்தசோனாரட்ன சந்தேசிய வானொலிக்குத் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் தமது கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைவதாகவும் இதற்குக்காரணம் அண்மைக்கிணைந்து ஐக்கிய தேசியக் கட்சியை மேலும் பலப்படுத்த வேண்டும் எனவும் இன்று தாம் இதன் அடிப்படையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையப்போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சிறிலங்காவுக்கு இன்று தேவைப்படுவது தெளிவான பலம்பொருந்திய ஓர் அரசாங்கமே ஆகும். முக்கியமாக வடக்கு - கிழக்கு யுத்தம்

# அதிமேற்றிராணியார் நாளை யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கத்தோலிக்க திருச்சபை அதிமேற்றிராணியார் அதி. வண நிக்கலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ நாளை யாழ்ப்பாணம் வர இருப்பதாக யாழ்ஆயர் இல்ல வட்டாரங்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளன.

இவருடன்திருக்கோணமலை மட்டக்களப்பு ஆயர் அதி வண கிங்ஸ்லி சுவாம்பிள்ளையும் இலங்கை துறவற சபையின் தலைவர் வண. பிதா அலெக்ஸாண்டரும் வரவுள்ளதாகவும், இதற்கான முன் ஏற்பாடுகள் யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் இல்லம் மேற்கொண்டு வருவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் நான்கு தினங்கள் தங்கியிருந்து மதவைபவங்களில் கலந்து கொள்ள உள்ளதுடன் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சென்று பார்வையிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# காமினியை ஐ.தே.கவில் இணைக்க ஜனாதிபதி விஜேதுங்கா ஆர்வம்

## ரணிலின் செல்வாக்கை குறைக்க முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா காமினி திசநாயக்கவை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைத்துக் கொள்ள அதிக ஆர்வம் காட்டிவருகிறார் எனவும், தென் மாகாணசபை வெற்றியை இவ்விடயத்தில் அவர் அக்கறையுடன் செயற்படுகிறார் எனவும் ''ராவய'' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஐக்கிய தேசியக் கட்சியினுள் பெருகிவரும் ஆதரவைக் குறைக்கும் நோக்குடனேயே அவர் இந்நடவடிக்கையில் தீவிரம் காட்டி வருவதாகவும், காமினி திசநாயக்காவை இணைத்துக் கொள்வதன் மூலம், தனது நிலையைப் பலப்படுத்திக் கொள்ள டி, பி. விஜேதுங்கா முயற்சிப்பதாகவும் விக்டர் ஐவன் குறிப்பிட்டார்.

இதேவேளை காமினி கட்சிக்குள் நுழைந்தால் தனது முக்கியத்துவம் குறைந்துவிடும் என ரணில் அஞ்சுவதாகவும் இதனால் காமினியின் வருகையைத் தடுக்க முயற்சி மேற்கொண்டுவருவதாகவும் மேலும் அவர் கூறினார்.

மன்னார் மாவட்டத்தில்

# 35 பாடசாலைகள் இராணுவத்தால் சேதம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 35க்கும் அதிகமான பாடசாலைகள் இராணுவத்தால் சேதமாக்கப்பட்டுள்ளன. ஆய்வு கூடமும் சேதமாக்கப்பட்டுள்ளது. இதனால் மாணவர்களுடைய கல்வி நிலையில் தேக்கம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மன்னார் மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் இனியவன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவித்த அவர், விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை அதிகமாக உள்ளதாகவும் கூறினார். விஞ்ஞான பாடத்தைப் படிக்கும் மாணவர்களுக்கு ஆய்வுகூட வசதிகள்எதுவும்இல்லை. அடம்பனில் இருந்த ஒரேயொரு ஆய்வு கூடமும் இராணுவத்தால் சேதமாக்கப்பட்டுள்ளது. முருங்கன், ஆண்டான் குளம், அடம்பன் வித்தியாலயங்கள் முற்றாகச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு பிரதேச சபை

# உயர்வகுப்பு மாணவரை தேர்தலில் போட்டியிட வற்புறுத்து

(மட்டக்களப்பு)

மகிழவெட்டுவான் கிராமம் சுற்றிவளைக்கப்பட்டபோது சந்தேகத்தின்பேரில் கைதாகி விடுவிக்கப்பட்ட உயர்தர வகுப்பு மாணவர் ஒருவர் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித்தேர்தலில் பலவந்தமாக போட்டியிட வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் படித்து வரும் இவர் வாராந்தம் இராணுவமுகாமிற்கு சென்று கையொப்பமிட்டு வந்தார்.

மண்முனை மேற்கு பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு நியமனப்பத்திரம் தாக்கல்செய்துள்ள சுயேட்சைக் குழுவின்வேட்பாளராக உள்ள இவர் பிரசார வேலை எதிலும் ஈடுபடாது கல்லூரியில் தொடர்ந்து படித்து வருகிறார்.

கைது செய்து கொண்டு சென்

டி. வில்மன் திஸாநாயக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்மக்களின் துயரம் குறித்து நாம் பெரும் கவலையடைகிறோம்

## கனேடிய தூதுக்குழுவினர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

சிறிலங்கா இராணுவம் இழைத்து வரும் அட்டூழியங்களால் தமிழ் மக்கள் குறிப்பாகக் கிளிநொச்சி மாவட்ட மக்கள் பெரும் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இது குறித்து நாம் துயரமடைகிறோம். இவ்வாறு கிளிநொச்சிப் பகுதிக்கு விஜயம் செய்த கனேடியத் தூதுக்குழுவினர் கூறியுள்ளனர்.

இக்குழுவினரின் சார்பில் கனடாசிறிலங்கா அபிவிருத்தி நிலையத் திட்ட ஆலோசகர் டென் றகுனின் கருத்துத் தெரிவிக்கையில், இது சம்பந்தமாகச் சிறிலங்கா அரசுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்தமாட்டோம் ஆயினும் தனிப்பட்ட முறையில் குறிப்பிடுவோம் என்றார்.

சமாதானம் என்பது மக்களின் பிரச்சினைகளை அறிந்து புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டியதாகும். அரச சார்பற்ற நிறுவனங்களும் பல்வேறு பொது ஸ்தாபனங்களும் இணைந்து சமாதானத்துக்கு குரல் எழுப்ப வேண்டும். நாமும் இவர்களுடன் சேர்ந்து குரல் எழுப்பத் தயங்க மாட்டோம் என்றும் அவர் கூறினார்.

கிளிநொச்சிப்பகுதியிலுள்ள மக்களின் இன்னல்களைக் கண்டு அவர்களுக்கு எந்த விதத்தில் உதவ முடியும் என்று ஆராய்வதற்காகவே வந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வை-12 விமானத்தின் கதவு வானிலிருந்த போது கழன்று வீழ்ந்தது

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படையின் சீனத்தயாரிப்பு வை-12 விமானமொன்று பறந்து கொண்டிருந்த போது கதவு கழன்று வீழ்ந்ததால் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டதாக விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரத்மலானையிலிருந்து கடந்த 15ஆம் திகதி உணவு மற்றும் பொருள்களை ஏற்றிக்கொண்டு வடபகுதி நோக்கிப் புறப்பட்ட இவ் விமானம் கொக்கல மீது பறந்து கொண்டிருந்த போது திடீரென அதன் கதவு கழன்று வீழ்ந்தது.

இதனால் இவ் விமானம் அவசர அவசரமாக இரத்மலானை விமானத் தளத்திற்குத் திருப்பப்பட்டு அங்கு தரையிறக்கப்பட்டது.

பின்னர் இவ் விமானத்தின் கதவு நாகொட வடுவல்பிட்டிய வடக்கு மலைப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாக அவ்அதிகாரி மேலும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# லொறி மோதிய சிறுவன் தலைசிதறிப் பலி!

(யாழ்ப்பாணம்)

கடைக்குச் சென்ற சிறுவன் லொறி மோதியதில் தலை சிதறிப்பலியான சம்பவம் ஒன்று நேற்று செம்மணி வீதியில் நடந்தது.

மேற்படி விபத்தில் செல்வராசா பிரசாந் (வயது 9) என்னும் சிறுவனே தலை சிதறுண்டு பலியானவராவார். இவர் கடைக்குச்செல்வதற்காக துவிச்சக்கர வண்டியில் றோட்டிற்கு வந்து சில யார் தூரம் கூட செல்ல முன்னர் லொறியால் மோதுண்டார் என இவரது தந்தையார் தெரிவித்தார்.

தலை சிதறுண்டு மூளை வெளியேறிய நிலையில் சிறுவனது உடல் காவல் துறையினரால் யாழ். மருத்துவ மனைக்கு கொண்டுவரப்பட்டது. (சி)

## வரி விளம்பரம்

### எரு விற்பனை

எமது சங்கத்தில் எரு விற்பனைக்குண்டு. வாங்க விரும்புபவர்கள். 10-02-94ம் திகதிக்கு முன்னர் கூறுவிலை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம். எருவை நேரடியாக பார்ப்பதற்கு அலுவலக நேரத்தில் சமுகம் தரவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி, கோப்பாய். (சி 8442)

### ஆசிரியர் தேவை

ஆண்டு 94 உயர்தரப் பரீட்சைக்குப் படிக்கும் மாணவிக்கு கணக்கியல், பொருளியல் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை, பல்கலைக் கழக அனுமதிக்குக் காத்திருக்கும் மாணவியர் விரும்பப்படும். இருபாலாரும் வரலாம் நேரில். திங்கட்கிழமை காலை வரவும் 48/9 முகாம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (7302)

### திருமண சேவை

பொருத்தமான மணமகன். மணமகள் எம்மிடம் உண்டு. தொடர்பு; மங்கள ஏஜென்சி. கொய்யாத் தோட்டம். (7300)

### விற்பனையாகிறது

THEASTROLOGICAL MAGAZINE 1994ANNUAL NUMBER விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி 8406)

### SPOKEN ENGLISH

Spoken English with Grammar, Literature, மொழித்திறன், பொது அறிவு, உளச்சார்புடன் கற்பிக்கப்படுகிறது. V. N. Kandasamy, 87, திருநெல்வேலி றோட் (றயில் கடவைக்கு சமீபமாக) கொக்குவில். (7299)

### விற்பனைக்குண்டு

முட்டை இடும் சில்க்கி வெள்ளை பாமாஸ் வெள்ளை பாமாஸ் கறுப்பு, ஸ்பங்கினர் பன்டம் ஆகியவை உடன் விற்பனைக்குண்டு. பிளான்ட் பரடைஸ் 152/2 கோவில் வீதி யாழ்ப்பாணம். (7298)

### மூக்குக்கண்ணாடி

உங்கள் கண்களுக்கும், முகங்களுக்கும் ஏற்ற டாக்டர்களின் மருந்துச் சிட்டைக்கமைய, மூக்குக்கண்ணாடிகளை தாமதம் எதுவுமில்லாமல் பெற்றுக்கொள்ள நாடுங்கள் முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட சேவையில் இன்றும்- மொறாயஸ் 50, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (சி-8274)

### றெனி மூக்குக் கண்ணாடி அகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி, உடன் வழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, (யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக), ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7268)

## 'மூலவேர்' நூல் அறிமுக விழா

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்க வெளியீடான 'மூலவேர்' நூல் அறிமுக விழா எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் வட்டு. இந்துக் கல்லூரியில் பிரபல எழுத்தாளரும் மாவட்ட பிரதி ஆணையாளருமான திரு து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இலக்கணப் புலவர் திரு. ச. பொன்னுத்துரை அவர்கள் வெளியீட்டுரையையும், கலாநிதி காரை. சுந்தரம்பிள்ளை, ஆசிரிய கலாசாலை உப அதிபர் கவிஞர் சோ பத்மநாதன் ஆகியோர் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

## வீதிகள் புனரமைப்பு

(தொல்புரம்)

1993ஆம் ஆண்டிற்கான அடிப்படையிலான மூலதன நன்கொடைஒதுக்கீட்டில் வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவில் பல உள் வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டையில்கள்ளி ஒழுங்கையும், சங்கானையில் கரைச்சி மயானவீதியும், சுழிபுரம் தொல்புரம் கண்டாமை ஒழுங்கையும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி முன் ஒழுங்கையும் சிறந்த முறையில்புனரமைக்கப்பட்டுள்ளன. மேலும் பல வீதிகளை புனரமைக்கும் பணியை தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதனையடுத்து வட்டுக்கோட்டை மூளாய் வீதி, இரண்டாம்ஒழுங்கையும், அராலி லன்பேட் வீதியும் புனரமைக்கப்படுகின்றன- (41)

## சைவப்புலவர் பரீட்சை

அகில இலங்கை சைவப் புலவர்சங்கம் அகில இலங்கை ரீதியில் ஆண்டுதோறும் நடாத்திவரும் 'சைவப் புலவர்' பரீட்சை இவ்வாண்டும் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை இம் மாதம் 28, 29, 30ஆம் திகதிகளில் வண். நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுமதி அட்டைகள அனுப்பி வைத்துள்ளதாகப் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## கருத்தரங்கு

யாழ். மாவட்ட லொறி உரிமையாளர்களுக்கான கலந்துரையாடலொன்று எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப 3. 00

## பாலர் பாடசாலை திறப்பு விழா

(தொல்புரம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப-அலுவலகத்தினால் நடாத்தப்படும் ஞானவைரவர் பாலர் பாடசாலை திறப்பு விழா அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

சங்கானை மாலியவத்தையில் திரு. பா. ஸ்கந்தகுமாரன் தலைமையில்நடைபெற்ற இவ் விழாவினை திரு. பொ. செல்வநாதன் தம்பதியர் மங்கள விளக்கினை ஏற்றி ஆரம்பித்து வைத்தனர். சங்கானை உப அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. பொ. சண்முகானந்தசிவம் அவர்கள் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டி பாலர் பாடசாலையினை திறந்து வைத்தார். மேலும் இவ் விழாவில் சிறப்பு விருந்தினர்களாக சங்கானை வட்டவைப் பொறுப்பாளர் திரு. ந. மதி, வலிமேற்கு பிரதேச சபைச் செயலாளர் திரு. க. திரவியம், வடபிராந்திய வர்த்தக சங்கங்களின் சமாசத் தலைவர் திரு த. கோவிந்தசாமி, அகில இலங்கை சைவர் கழகத்தின் அமைப்பாளர் திரு. பொன் சாம்பசிவம் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இளைப்பாறிய உத்தியோகத்தர் திரு. ந. சிவசோதி நன்றியுரை வழங்கினார். (41)

## மகாகும்பாபிஷேகம்

(தொல்புரம்)

தாவடி சிறி அம்பலவாணவேத விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழனன்று காலை ஒன்பது மணிமுதல் நடைபெறவுள்ளது. தொடர்ந்து 48 தினங்கள் நடைபெறும் மண்டலாபிஷேகத்தின் போது தினமும் மாலையில் இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றின் தொடர் விரிவுரை த. சிவகுமாரனினால் நடத்தப்படவுள்ளது

## மண்ணெய் திருட்டு

(சுன்னாகம்)

விவசாயத் தேவைக்கென வைத்திருந்த, 100 லீற்றர் மண்ணெண்ணெய் ஒரே இரவில் திருட்டுப்போன சம்பவமொன்று அண்மையில் இணுவில் மேற்குப் பகுதியில் நடைபெற்றது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

இணுவில் மேற்குப் பகுதியிலுள்ள சண்முகேஸ்வரன் என்பவரது வீட்டின் பின்புறத்தில் பீப்பாய் ஒன்றினுள் வைக்கப்பட்டிருந்த 100 லீற்றர் மண்ணெண்ணெய் வீட்டார் தூங்கிக் கொண்டிருந்த வேளையில், குழாயின் மூலம் உறிஞ்சி திருடப்பட்டது, வீட்டிலிருந்த பாத்திரங்களும் கூட இத்திருட்டின்போது பயன்படுத்தப்பட்டிருந்தன. (11)

## ST. HENRY'S COLLEGE ILAVALAI (MANIPAY)

தற்போது எமது கல்லூரி காலை நேரப் பாடசாலையாக சங்கரப்பிள்ளை வீதியில் (மானிப்பாய் இந்து கல்லூரிக்கு முன்பாக) நடைபெறுகின்றது என்பதை அறியத் தருகின்றேன்.

அதிபர்

(7303)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 1982-01-23

மறைவு 1993-12-10

புங்குடுதீவு 2-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி வட்டக்கச்சியில் வசித்தவருமான,

### செல்வி கார்த்திகா சதாசிவம்

(யாழ்/ புங்குடுதீவு அமெரிக்கன் மிஷன் அ.த.க பாடசாலையின் பழைய மாணவியும் கிளி/ வட்டக்கச்சி ம. வி ஆண்டு 7 மாணவியும்)

இன்றிருந்தார் நாளை இல்லையெனும் உண்மைதனை
நன்றிருந்த நாளெல்லாம் நாமறிவோம் - எனும்
உண்மையை மனதினிலேற்றி
அமரரின் ஆத்மா சாந்தியடையவென
இறைவனை இறைஞ்சுகின்றோம்

உன்பிரிவால் துயருறும்
அன்பு அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்:-
க. சதாசிவம்
29, கட்சன் வீதி, வட்டக்கச்சி. (7305)

## கூறுவிலை கோரல்

### லொறிக் கொள்வனவு

எமது உபயோகத்திற்கு தரமான நிலையிலுள்ள லொறி ஒன்று உடன் தேவையாகவுள்ளது. இசுசு டாட்டா, பென்சு லேடன் ரக லொறிகளை விற்பனை செய்ய விரும்புபவர்கள், தரம், ரகம், விலை போன்ற விபரங்களைவிபரமாகக் குறிப்பிட்டு ''பொதுமுகாமையாளர், வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 499, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்'' என்னும் முகவரிக்கு 31-01-94க்கு முன்னர் அனுப்பி வைக்கவும். கடித உறையில் மேல் மூலையில் ''லொறிக் கூறுவிலை'' எனக்குறிப்பிடவும்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண தெ.ப.பொ.கூ. ச சமாசம்,
யாழ்ப்பாணம்.
(சி-8444)

## யாழ். பல்கலைக்கழக புவியியற்கழகம் நடாத்திய அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

21-01-94 வெள்ளிக்கிழமை புவியியற்றுறை விரிவுரை மண்டபம் 02இல் நடைபெற்ற அதிர்ஷ்ட லாப சீட்டிழுப்பு வைபவத்தில் பின்வருவோர் அதிர்ஷ்டசாலிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்:

முதலாம் பரிசு இல. 08542 - 5000/-

இரண்டாம் பரிசு இல. 00641 - 2500/-

மூன்றாம் பரிசு இல. 06318 - 1000/-

ஆறுதல் பரிசுகள் தலா 200/-

1. 02588.
2. 02417
3. 10323
4. 03676

## மேஜர் தாரணியின் 4 ஆவது ஆண்டு நினைவாக

மதிவதனி சுப்பிரமணியம்

அத்தாய் பூநகரி

தாரணி......

## நினைவு கூருகின்றோம்... 1994-01-23

1986ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்காக் காவற்துறையினரால் கைதாகி இதே தினத்தில் காவல் நிலையத்தில் வைத்துக் கொலை செய்யப்பட்ட:

தேவன் (ரி. ஜெயதேவன் - செங்கலடி - மட்டு)

திருகோணமலைக் கடலோரம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாகக் கரையொதுங்கிய தமிழ்ப் பொதுமகன்

யாழ்-சுன்னாகம், கட்டுவன், பெரியவிளான், தெல்லிப்பளைப் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமான,எறிகணை மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 17தமிழர்கள்

1987ஆம் ஆண்டு மணலாறு - தெகிவத்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

கப்டன் நேசன்

4. 03676
5. 00659
6. 06250

புவியியற்கழகம்

(7304)

வியாழக்கிழமை பி. ப 3. 00 மணிக்கு கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரியில் நடைபெற வுள்ளது. இதில் அனைத்து லொறி உரிமையாளர்களை யும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கேட் டுள்ளார்.

ஓம் சாயிராம்

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் தை மாதம் 14ம் நாள் (27-01-1994) வியாழக்கிழமை காலை 9-00மணிமுதல் 12-00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எங்கள் கனிஷ்ட புத்திரன்
திருநிறைச் செல்வன்
**சிவநேசன்**
(மருத்துவத்துறை திணைக்களம்,
மருத்துவ பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்,
போதனா வைத்தியசாலை)
அவர்களுக்கும்

எங்கள் கனிஷ்ட புத்திரி
திருநிறைச் செல்வி
**ஜெயகௌரி**
அவர்களுக்கும்

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா அவர்களின் திருவருளால், திருநெல்வேலி, இராமநாதன் வீதி, சத்யசாயி சமித்தி மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதித்து நண்பகல் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

**திரு. சி. கனகரத்தினம்** ஜே. பி. யூ. எம்.
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிகம்.

திருமதி சரஸ்வதி கனகரத்தினம்
''சிவசிதான்'', நல்லூர்-யாழ்ப்பாணம்

**திரு. அ. சோமசுந்தரம்**
இளைப்பாறிய மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் - யாழ்ப்பாணம்.

திருமதி இராஜேஸ்வரி சோமசுந்தரம்
'தணிகை' யமுனா வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம்.

இரு வீட்டாரின் அழைப்பு
தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்ப முடியாமைக்கு மன்னிக்கவும்

(7311)

தாரணி......

நீ, பூநகரியில் பூத்த பூகம்பம்
மகளிர் படையணியின் வளர்ச்சியில் மூச்சாக
நின்றவள்
பேச்சடங்கி நீ, பலாலியில் மௌனித்து
மூன்றாண்டுகளின் முடிவில் படிதாண்டிய எம்
வளர்ச்சியில்...
உன்னை நினைக்கின்றோம், நீண்டுசெல்லும்
காலப்பரப்பிலும்
அழியாத உன் நினைவுகளோடு, இடைவிடாது
ஒலிக்கும்
உன் கருவியோடும் நடக்கிறோம்
நெஞ்சோடு வரித்த தாயக விடுதலையை -உன்
நினைவோடு வென்றெடுப்போம்.

குடும்பத்தினர்,
தோழிகள்.

(சி-8445)

## 2ஆம் ஆண்டு

## நினைவு அஞ்சலி

அன்னையின் மடியில்:
**31-07-1972**

ஆண்டவன் அணைப்பில்
**30-01-1992**



## செல்வி கந்தசாமி மாலதி
**(நாரந்தனை)**

நித்தம் சிரித்திருந்த புத்தம்புது மலரே மாலதி
ஆளாத்துயரில் எம்மை அணுவுலகாய் உங்களிற்காய்
மீளாத்துயில் கொண்டு மிகவிரைவில் சென்றுவிட்டீர்.

உம் பிரிவால் துயருறும்
அன்பு அப்பா, அம்மா, தங்கைமார், தம்பிமார்,
அப்பம்மா, அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார்.

(7310)

**கப்டன் நேசன்** (இராசதுரை ஜெயச்சந்திரன் செல்வநாயகபுரம் -திருகோணமலை)
1988ஆம்ஆண்டு இதேதினத்தில் யாழ்-இளவாலை முள்ளானைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் வல்லவன்** (சாந்தமூர்த்தி குகமணி -அத்தியடி, பருத்தித்துறை - யாழ்)
இதே பகுதியில் இந்தியப்படையினர்மேற்கொண்ட முற்றுகையின் போது அடித்துக்கொலை செய்யப்பட்ட

**சந்தோசம்** (செல்லையா சிவகுமார் - உடையார் கிணற்றடி - அளவெட்டி - யாழ்)
கிளிநொச்சி - இரணைமடுப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**அல்பேட்** (முத்தையா ரஞ்சநாதன் - இணுவில்வீதி, மானிப்பாய் யாழ்)
1991ஆம் ஆண்டு மட்டு - ஏரன்ஸ் ஒழுங்கையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**தயான்** (இராசமாணிக்கம் ஜெயச்சந்திரன் - இருதயபுரம் - கிழக்கு-மட்டு)
யாழ்-கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**மேஜர் தாரணி** (மதிவதனி சுப்பிரமணியம்-அத்தாய் பூநகரி)
1992ஆம் ஆண்டு மட்டு - கரவெட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கணேஷ்** (தம்பிமுத்து சுந்தரலிங்கம் - கல்முனை அம்பாறை)
மட்டு - குருமண்வெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**குயிலன்** (கந்தையா சத்தியா - பார்வீதி-மட்டு)
மட்டக்களப்பில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

✽ இக்குறியிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ்அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8438)

யாழ்ப்பாணம்



# நேட்டோவின் "சமாதானத்தின் பங்காளர்கள்" மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்குமா?

பெல்ஜியம் தலைநகர் பிரசல்சில் இவ்வார ஆரம்பத்தில் நடந்து முடிந்த நேட்டோ எனப்படும் அமெரிக்கத் தலைமையிலான வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் எனும் இராணுவக் கூட்டமைப்பின் மாநாடு பல புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்துள்ளது. ஒன்று 'சமாதானத்தில் பங்காளர்கள்' எனும் நேட்டோ முன்வைத்துள்ள புதிய இராணுவக் கூட்டமைப்பு; இரண்டாவது முன்னாள் யூகோஸ்லேவியாவின் பொஸ்னிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக வான் தாக்குதல் எனும் இரு தீர்மானங்கள் முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்களாகக் கருதப்படுகிறது.

''சமாதானத்தின் பங்காளர்கள் திட்டம்'' என்பதில் முன்னாள் சோவியத்தின் நட்பு நாடுகளான கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இப்போது அமெரிக்கக் காலில் விழுந்துள்ளன. தற்போதைய ரஷ்யா மீண்டும் கண்டம் பிடிக்கும் நாடாக மாறி விடுமோ என்ற அச்சமே காரணமாகும். இதன் காரணமாகவே தங்களையும் நேட்டோ அமைப்பில் சேர்க்குமாறு கோரியுள்ளன. சுமார் 45 ஆண்டுகளாக இயங்கும் 16 நாடுகள் கொண்ட நேட்டோ அமைப்பினைக் கிழக்கு ஐரோப்பாவுக்கு விரிவுபடுத்துவதா என்பதை அமெரிக்கா சிந்திக்க ஆரம்பித்துள்ளது. காரணம் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் செல்வந்த நாடுகளல்ல. இவைகளிடம் உள்ள இராணுவத் தளபாடங்கள் குறிப்பிடத்தக்களவு பலமானதாகவும் இல்லை. கிழக்கு ஐரோப்பிய நாடுகளை நேட்டோவின் ஒரே குடையின் கீழ் இணைத்தால் இந்நாடுகளின் முழுப் பாதுகாப்பும் மறைமுகமாக அமெரிக்கத் தலைமையிலேயே விழும். இதுவே இந்நாடுகளுக்காக அதிக பணம் செலவிட்டு தனது செலவை அதிகரிக்க வேண்டுமா என அமெரிக்கா சிந்திக்கலாம்.

அடுத்த காரணம் இப்போதே 16 நாடுகள் கொண்ட நேட்டோவினால் எந்த ஒரு பிரச்சினையிலும் ஒருமித்த கருத்தைக் காண்பது கடினமாக உள்ளது. நேட்டோ அமைப்பை மேலும் விரிவுபடுத்தினால் நேட்டோவில் ஒரு தீர்மானம் எடுப்பது கடினமாகி விடும். எந்தப் பிரச்சினையிலும் இழுபறி ஏற்படும். இதனால் நேட்டோ தனது வலிமையை இழக்கும் என அமெரிக்கா அஞ்சுவதாக உள்ளது.

மற்றைய காரணம் யூகோஸ்லேவியா போன்றே பல இனங்களையுடைய நாடுகள் கிழக்கு ஐரோப்பா. இன்று யூகோஸ்லேவியா பிளவுற்று தன்னுள் மோதிக் கொள்வதுபோல் நாளையே நேட்டோவில் இணைந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் இதுபோல் இனப்பிரச்சினைகள் தோன்றினால் அதைத் தீர்த்து வைக்கும் கட்டாயக் கடமை நேட்டோவுக்கு உண்டு. எனவே அத்தகைய அமைப்பு நேட்டோவையே பாதிக்கும். தற்போது இயங்கும் அளவு அமைதியாக நேட்டோ இயங்குமா என அமெரிக்கா அஞ்சலாம்.

மற்றையது ரஷ்யா தன்னுடன் எல்லைகளை பகிர்ந்து கொள்ளும் முன்னாள் சோவியத் குடியரசுகளையும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் அமெரிக்கா ஒரே தலைமையின் கீழ் இயங்கும் நேட்டோவில் இணைத்தால் ரஷ்ய மக்களுக்கும் ரஷ்ய தேசியவாதிகளுக்கும் ரஷ்ய இராணுவத்திற்கும் கூட நிச்சயம்கோபம் ஏற்படக்கூடும். தம் எல்லை நாடுகளில் அமெரிக்கா இராணுவம் ஒத்திகை பார்ப்பதை ரஷ்ய இராணுவம் பொறுத்துக் கொள்வது கடினம். ரஷ்யாவின் பெருமையை காற்றில் பறக்கச்செய்து ரஷ்யாவை அநாதரவான நாடாக தனிமைப்படுத்துவது ரஷ்ய தீவிர தேசியவாதி ஷெர்னோவஸ்கி போன்றோர்க்கு மேலும் பலம் சேர்க்கும். ஷெர்னோவஸ்கியின் குரலும் ஓங்கும்.

இத்தகைய அமெரிக்கத் தவறுகள் மூலம் இதுபோன்ற ஷெர்னோவஸ்கி ரஷ்யாவில் செல்வாக்கு பெற்று ஆட்சிக்குவந்துவிட்டால் கம்யூனிஸ சோவியத்தைவிட தேசியவாத ரஷ்யாவின் போக்கு தனக்கு பாதகமாகலாம் என அமெரிக்கா எண்ணலாம். ரஷ்யாவில் கொர்பச்சேவ் போன்ற மிதவாதிகளும் ஷெர்னோவஸ்கி போன்ற தீவிர தேசியவாதிகளும் நேட்டோ விரிவாவது குறித்து எச்சரித்துள்ளனர். ஷெர்னோவஸ்கி நேட்டோ விரிவுபடின் அது மூன்றாம் உலகப் போரின் அறிகுறி எனக்கூறி அமெரிக்காவை சிந்திக்க வைத்துள்ளார். ஆனால் ஒரு நாட்டின் மீது நடத்தப்படும். தாக்குதல் தமது நாடுகள் மீது நடத்தப்படும் தாக்குதலாக கருதப்படும் என்ற நேட்டோவின் இராணுவ அம்சமற்ற 'சமாதானத்தின் பங்காளர்கள்' திட்டம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு நிச்சயம் அதிருப்தியை ஏற்படுத்தும். இந் நிலையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளை நேட்டோவில் இணைக்கும் முதற்கட்டமாகவே சமாதான பங்காளர் திட்டம் என அமெரிக்கா கூறிவருகிறது.

எனவே, சில வருடங்கள் கழித்து இந்தத் திட்டத்தில் உள்ள நாடுகளை நேட்டோவில் இணைப்பது என்பது அமெரிக்க யோசனை. அதாவது சரிந்து வரும் ரஷ்ய ஜனாதிபதி யெல்சினின் செல்வாக்கை மேலும் சரியவைக்க வேண்டாம் எனும் எண்ணத்திலும் அடுத்த ஆண்டு ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் யெல்சின் மீண்டும் வெற்றி பெற்றால் சமாதானத்தின் பங்காளர்களான கிழக்குஐரோப்பிய நாடுகளை நேட்டோவில் இணைத்து விடலாம் என்பது அமெரிக்காவின் உள்ளார்ந்த திட்டங்களாக இருக்கலாம்.

பொஸ்னியாவை கூறுபோட்டு முஸ்லிம் மக்களுக்கு சேரவேண்டிய பல முக்கிய பகுதிகளை தம்வசம் வைத்திருக்கும் சேர்பியர்கள் மீது வான் தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என நேட்டோ பேசுவது இது முதல் முறையல்ல. ஈராக்கின் தென்பகுதியை விமானம் பறக்க தடைசெய்த பகுதியாக அமைத்து தன்னை ஒரு பெரியவனாககாட்டிக் கொள்ளும் அமெரிக்கா பொஸ்னிய பிரச்சினையில் துணிந்து இறங்க மறுத்து வருகிறது. ஏனெனில் பொஸ்னியாவில் வான் தாக்குதலுடன் சுமார் 50 ஆயிரம் வீரர்கொண்ட தரைப்படையும் அமைக்கப்பட்டால்தான் பொஸ்னியாவில் சேர்பியரின் கட்டுப்பாட்டிலுள்ள ஐந்து முஸ்லிம் நகரங்களை மீட்கலாம் என நம்பப்படுகிறது.

வியட்நாமில் கெரில்லா போருக்கு எதிராகதான் கண்ட தோல்வி, சோமாலியாவுக்கு படை அனுப்பிதான் கண்ட அவமானம், ஹெய்ட்டியில் அரசியல் இராணுவ ரீதியாக கண்ட இயலாமை இவையெல்லாம் பொஸ்னிய பிரச்சினையில் அமெரிக்கா நேரடித் தலையீட்டை செய்ய விரும்பாதிருக்க காரணமாக விருக்கிறது. சவுதி அரேபியாவின் ஆயுதக் கொள்வனவு குவெய்ட்டின் பெற்றோல் போல் லாபம் ஏதுமின்றி பொஸ்னியாவில் தனது வீரர்களை இழக்க அமெரிக்கா விரும்பவில்லை. ஈராக்கில் நடத்திக் காட்டியதுபோல் 'பாலைவனப் புயல்' இராணுவ நடவடிக்கை மூலம் அதாவது ஒரே தாக்குதல் மூலம் பொஸ்னிய சேர்பிய போராளிகளை மண்டியிடச் செய்ய முடியாது என்பதும் உண்மை. எனவேதான் வான்தாக்குதலில் மட்டும்தாம் பங்கெடுப்போம் தரைப்படைக்கு தம்மால் வீரர்களை தரமுடியாது என்கிறது அமெரிக்கா, தாம் வான் தாக்குதல் நடத்தலாம் என நேட்டோவும் அமெரிக்காவும் எச்சரிப்பது இது எட்டாவது தடவையாகும். பொஸ்னியா மீது வான் தாக்குதல் நடந்தால் பொஸ்னியா யூகோஸ்லேவியாவில் நிற்கும் ஐ. நா. வீரர்களை தனது நாட்டுப் படைகள்மீது சேர்பியர்கள் தாக்கலாம் என பிரிட்டனும், கனடாவும் அஞ்சுகின்றன. இதுவும் பொஸ்னியா மீது நேட்டோ தாக்குதல் நடத்த அஞ்சும் அம்சங்கள்.

பொஸ்னியாமீது தாக்குதல் நடத்தினால் மட்டும் பிரச்சினை முடிந்துவிடாது. பிரச்சினைக்கான தீர்வும் சிக்கலாகும். முழு அளவிலான போர் நடத்த வேண்டியும் ஏற்படும். இதற்கு அமெரிக்கா நிச்சயம் தயாரில்லை. சேர்பியர்களுக்கு எதிராக தொடர் தாக்குதல் நடத்தின் யூகோஸ்லேவியா அதைபார்த்துக்கொண்டிருக்குமா என்பதும் ரஷ்யாவின் நிலை எப்படியெல்லாம் மாறும் என்பதும் அமெரிக்காவையும், நேட்டோவையும் சிந்திக்க வைத்துள்ள அம்சங்கள். எனவே நேட்டோ, பொஸ்னியாவில் சேர்பியருக்கு எதிராக தாக்குதல் நடத்துவது இலகுவானதல்ல.

(நன்றி ஏ. எப். பி.)

## மந்தபோசாக்கு காரணமாக தாய்சேய் நலம் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணமாநகரசபைப் பகுதியில் சென்ற ஆண்டில் மந்த போசாக்கு காரணமாக தாய்சேய் பலரும் பாதிப்புக்கு இலக்காகியுள்ளனர். இதேவேளை பல சேய்கள் அழிந்து போய் இருப்பதாக யாழ். மாநகரசபையின் தாய் சேய் பகுதியினரின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மந்த போசாக்கு மற்றும் அதிர்ச்சி காரணமாக நூற்றியேழு பேருக்கு இயற்கையான கருச்சிதைவும், நாற்பத்தியொரு பேருக்கு சிசு மரணங்களும், முப்பத்தியேழு பேருக்கு குழந்தைகள் இறந்து பிறந்திருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர சபையின் தாய் சேய் நலப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (நி)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மூளைக்காய்ச்சல் பரவுகிறது

(வாழைச்சேனை)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களிலும் மக்களிடையே மூளைக்காய்ச்சல் நோய் தீவிரமாக பரவி வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய மூளைக்காய்ச்சல் என்று இனங்காணப்பட்டுள்ள இந்த நோய் வாகரை, சித்தாண்டி, வாழைச்சேனை ஆகிய இடங்களைச் சேர்ந்த மூவரைப் பீடித்துள்ளமை தெரியவந்திருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

நுளம்புகளாலேயே இந்த நோய் பரவுவதாகவும், பன்றிகள் வாழும் சூழலில் காணப்படும் நுளம்புகள், வேளாண்மைகளின் அடிக்கட்டைகளில் நீர் தேங்கி நிற்கும் சூழலும் நுளம்புகளின் பிறப்பிடமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும் மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் இப் பிரதேசத்தில் ஸ்தம்பிதம் அடைந்து இருப்பதனால் நுளம்புப் பெருக்கம் முன்பொருபோதும் இல்லாதவாறு அதிகரித்து இருப்பதாகவும், அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் பின்னர் நுளம்புப் பெருக்கம் அதிகமாகி இருப்பதாகவும் மேலும் தெரிய வருகிறது.

## கணவனின் கத்திவெட்டில் மனைவி கோரக் கொலை

(வடமராட்சி)

குடும்பப் பகைமை காரணமாக எழுந்த விவகாரம் கொலையில் முடிந்துள்ளது. இச் சம்பவம் வடமராட்சி கிழக்கு மாமுனை பகுதியில் நேற்று முன்தினம் காலை நடந்தது.

கணவனின் கத்தி வெட்டுக்கு மனைவி கோரமான முறையில் கொல்லப்பட்டார். மனைவியின் சகோதரர் ஒருவர் உடலில் பல வெட்டுக் காயங்களுக்கு இலக்காகி பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார்.

கந்தையா வசந்தகுமார் என்பவர் தனது மனைவி வசந்தகுமார் தங்கம்மாவை கத்தியால் வெட்டியதில் படுகொலை செய்யப்பட்டார். வெட்டியவரின் மைத்துனரான சின்னத்தம்பி குலசேகரம் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வெட்டியவர் தலைமறைவாகி உள்ளார். (யோ)

## றுகுணு புறப்பட்டது

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறையில் உரம் இறக்கி முடித்த 'றுகுணு' கப்பல் நேற்று மாலை கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. 'வாதுவ' கப்பல் நேற்று கொழும்பில் இருந்து புறப்பட்டு நாளை திங்கட்கிழமை பருத்தித்துறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கோமாரி கப்பலும் எதிர்வரும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் வருமென எதிர்பார்க்கப்படுகிறது. (யோ)

## சிறந்த சித்தி பெற்ற மாணவருக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீ கணேசமகா வித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை இவ் வித்தியாலயத்தில்1993 டிசம்பரில் நடைபெற்ற க. பொ. த (சா/த) பரீட்சையில் அதி கூடிய பெறுபேறுகளைப் பெறும் முதல் மூன்று மாணவர்களுக்கு முறையே 2500 ரூபா, 2000 ரூபா, 1500 ரூபா பணத்தினை ஊக்குவிப்பு அன்பளிப்பாக வழங்கத் தீர்மானித்துள்ளது. இதற்கென பெறுபேறுகள் வெளியாகியதும் சம்பந்தப்பட்ட மாணவர்கள் பற்றிய விபரங்களை அறிவிக்குமாறு இக் கிளை மேற்படி வித்தியாலய அதிபரிடம் கோரியுள்ளது, அத்துடன் 5ம்- ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப்

## நூலக உதவியாளர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திற்கு ''நூலகஉதவியாளர்'' தரம் மூன்றில் ஆட்களை சேர்த்துக் கொள்ளுவதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 12ஆம் திகதி

JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

## VADDUKODDAI

முழுநேரப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

### 1. Technician Diploma Courses

(English Medium)

(i) **Civil Engineering & Quantity Surveying - 2 years**

Educational qualification:- G.C.E. (O-L) - minimum six subjects including maths-C; science-C; English-S

கல்வித் தகைமை:- G.C.E. (O/L)-குறைந்தபட்சம் 6பாடங்கள்; கணிதம்-C, விஞ்ஞானம்-C, ஆங்கிலம்-S உட்பட.

### 2. Diploma Courses

(i) **Draughtsmanship - Civil**

(ii) **Computer Programming & Data Processing**

(Basic, Cobol & d—Base III +)

Practicals on IBI - PC AT & MAT 386 Industrial Controller

Educational qualification:- G.C.E. (O-L) - minimum six subjects with credit for maths.

கல்வித் தகைமை:-G.C.E. (O/L) குறைந்த பட்சம் 6 பாடங்கள்; கணிதம் - C உட்பட

(iii) **Advanced Diploma in Computing.** (Syllabus includes British computer society & Australian computer society) - 1 year

Educational qualification:- G.C.E. (O-L) - minimum six subjects with maths - C & English - s G. C. E. (A-L) minimum one subject

### 3. Technician Certificate Courses

(i) **Air-Conditioning & Refrigeration - 1½ years**

(ii) **Radio & T. V. Servicing - 1 year**

(iii) **Automobile Technology - 1 year**

Educational qualification:- G.C.E. (O-L) with Maths - S & Science - S

கல்வித் தகைமை:- G.C.E. (O-L) கணிதம் - S, விஞ்ஞானம் - S

### 4. Craft Certificate Courses (தமிழ் மொழி மூலம்)

(i) **Machine shop Practice - 1 year**

இயந்திரப் பட்டறைப் பயிற்சி - ஒரு வருடம்

(ii) **Electrical wiring & Installation Practice - 1 year**

மின்னிணைப்புப் பயிற்சி - ஒரு வருடம்

(iii) **Welding Practice - 1 year**

ஓட்டுனர் பயிற்சி - ஒரு வருடம்

கல்வித் தகைமை:- க. பொ. த. (சா. த) வரை படித்திருத்தல் வேண்டும்.

### விசேட கவனத்திற்கு

- இல. '4' தவிர்ந்த ஏனைய பயிற்சி நெறிகள் யாவும், மாணவர்கள் வெளிநாட்டுப் பரீட்சைகளை எதிர்கொள்ளத்தக்க வகையில் ஆங்கில மொழிமூலம், வேண்டிய தமிழ் விளக்கத்துடன் நடாத்தப்படும்; இதற்கு ஏற்ப பயிற்சிக்காலம் பூராவும் ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது.
- இதர வசதிகள்:
  1. நூலகம்
  2. விடுதி (ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியே)
  3. விளையாட்டுத்துறை
- **விண்ணப்பப் படிவம்: ரூபா 30/-**

பெற்றுக்கொள்ளக்கூடிய இடம்:- "CLS" புத்தகசாலை, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்
"J.C.I.T." அலுவலகம் வட்டுக்கோட்டை.

விண்ணப்பப் படிவங்களை 14-02-94க்கு முன் வட்டுக்கோட்டையில் கிடைக்கக் கூடியதாக தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கவும்.

- போதியளவு மாணவர்கள் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரமே குறிப்பிட்ட பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும்.

**முக்கிய குறிப்பு:**

The "Open University of Sri Lanka" (OUSL) has granted exemptions for the Technician Diploma Courses.

தொழில்நுட்ப டிப்ளோமா பயிற்சி நெறிகளுக்கு, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் 'பாட விதான - விலக்கு' (exemption) அளிக்கப்பட்டுள்ளது.

(சி-8441)

---

கான் போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 12ஆம் திகதி காலை 10-30 மணிக்கு இராமநாதன் மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இப்பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பரீட்சை அன்று தேசிய அடையாள அட்டையைத் தவறாது கொண்டு வரும்படி பணிக்கப்பட்டுள்ளது. (05)

---

அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற வித்தியாலய மாணவர் இருவருக்கும் தலா ஆயிரம் ரூபா பணத்தினை பிரஸ்தாபக் கிளை அனுப்பிவைத்துள்ளதாகவும் இக் கொடுப்பனவு விரைவில் நடைபெறவுள்ள பரிசளிப்பு விழா, வின்போது குறிப்பிட்ட மாணவர் இருவருக்கும் வழங்கப் படவுள்ளதாகவும் வித்தியாலய அதிபர் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். (22)

---

## எழுதுவினைஞர் தேவை

நெல்லியடி வர்த்தகர் சங்க அலுவல்களைக் கவனிப்பதற்கும் அலுவலகத்தில் வேலை செய்வதற்கும் 25 வயதுக்கு மேற்பட்டவர் கல்வித்தகைமைகளுடனும் நற்சான்றிதழ்களுடனும் 24-1-94 திங்கட்கிழமை மாலை 3மணிக்கு நெல்லியடி வர்த்தகர் சங்க காரியாலயத்தில் நேரில் சமுகம் தரவும்.

(7278)

---

## திறப்பு விழா அழைப்பிதழ்

காலம்:- 23.1.1994 ஞாயிறு
காலை 10 மணி --- 11 மணி
இடம்:- நெல்லியடி பிரதான வீதியில் அமைந்துள்ள

### "லிங்கம் ரெக்ஸ்"

என்ற நிறுவனத் திறப்பு விழாவில் அனைவரும் கலந்து கொள்ளும் வண்ணம் பணிவாய் வேண்டிக் கொள்கிறேன்.

உரிமையாளர்
(7301) மு. அமிர்தலிங்கம்

தொழில்நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்

## கல்வியாண்டு ஆரம்பம்

எமது கல்லூரியின் 1994ஆம் கல்வியாண்டு ஆரம்பமாகும் புதிய திகதிகள் பின்வருமாறு இருக்கும் என்பதனை அறியத்தருகிறேன்.

1. பகல்நேர புதிய மாணவர்களுக்கு- 19у4.01.31
2. பகல்நேர 2-ம், 3-ம், 4-ம் ஆண்டு மாணவர்களுக்கு- 1994.02.01
3. மாலைநேர/பகுதிநேர புதிய மாணவர்களுக்கு- 1994.02.05
4. மாலைநேர/பகுதிநேர 2-ம்,3-ம்,4-ம் வருட மாணவர்களுக்கு- 1994.02.06

தொழில்நுட்பக்கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்:
1994-01-21

க. ஜெயரத்தினம்
அதிபர்.

(சி-8440)



ஓம் விராட்விஸ்வப் பிரமனே நம

## 1-ம் வருட நினைவஞ்சலி



மலர்வு 26 - 09 - 1917

உதிர்வு 03 - 02 - 1993

அமரர்

**உயர்திரு சு. காளிக்குட்டிபத்தர்**

(திரியாய் விரையடி விநாயகர் ஆலய பூசகர்)

திதி: 23-1-94

ஆண்டு ஒன்று ஆனபோதும்
ஆறாது எமது மனம் உங்களை நினைந்து
மனமுருகி கண்ணீர் வடிக்கும்

106, ஜின்னாவீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி-மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(7294)



உ
சிவமயம்

## 46ஆம் நாள் நினைவஞ்சலி




## அறிவியல் அரங்கு

நாவன்மார்கட்டு சனசமூக நிலையம் நடத்தும் மாதாந்த அறிவியல் அரங்குத் தொடரின் இருபதாவது நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறு மணியளவில் நிலையத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த அரங்கில் கோப்பாய் மக்கள் நலன்காக்கும் பிரிவின் திட்டமிடல் அதிகாரி கா. கணேசலிங்கம் ''யாழ்ப்பாண குடாநாட்டில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களும் அவற்றின் செயற்பாடுகளும்'' என்னும் பொருளில் உரை நிகழ்த்தவுள்ளார். அத்துடன் அன்று நிலையத்தின் வெளியீடான வசந்தம் கையெழுத்துச் சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

## இலவசமாக வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்- வண்- மேற்கு முஸ்லிம் வித்தியாலயத்தில் இயங்கி வரும் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில் 9-ம், 10-ம், 11-ம் ஆண்டு மாணவர்களுக்கு தினமும் மாலையில் இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவர்களினால் இலவசமாக வகுப்புக்கள்நடாத்தப்பட்டு வருகின்றன. (22)

## கயிறு உற்பத்தி நிலையம் ஆரம்பம்

வருமான ஊக்குவிப்புத் திட்டத்தின், தும்பிலிருந்து கயிறு உற்பத்தி செய்யும் நிலையம் அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்படும் இந்த இரண்டாவது நிலையத்தால் பன்னிரண்டு குடும்பங்கள் பயன்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாஷையூரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந் நிலையத்திற்கு தேவையான நிதி கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

## பொதுக்கூட்டம்

(தொல்புரம்)

வலிகாமம் மேற்குப் பிரதேச வர்த்தகர் சங்கத்தின் கிளைப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை 2.00 மணியளவில் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி மண்டபத்தில் சங்கத்தலைவர் த. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில்சங்கானை வட்டஅரசியல்துறைப்பொறுப்பாளர் திரு. ந மதி அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கவுள்ளார். கிளை


ஈழநாதம்

## 4ஆம் ஆண்டு நிறைவுப் போட்டி

சிறுகதை, கவிதை,
மாணவர்களுக்கான கட்டுரை

முதலாம் பரிசு: தங்கப்பதக்கத்துடன் கூடிய 1500 ரூபா ரொக்கப் பணம்.

இரண்டாம் பரிசு: 1500 ரூபா ரொக்கப் பணம்.

மூன்றாம் பரிசு: 1000 ரூபா ரொக்கப் பணம்.

போட்டியில் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்

முடிவுத்திகதி : **31-01-1994**



## வைத்தியர் தேவை

யாழ்நகரின் மத்தியில் இயங்க இருக்கும் வைத்திய சிகிச்சை நிலையத்திற்கு (CLINIC) குழந்தை வைத்தியத்தில் அனுபவம் மிக்க வைத்தியர் (M. B. B S.) முழு நேரமாகவோ பகுதிநேரமாகவோ கடமையாற்றத் தேவை. ஓய்வு பெற்றோர், இடம்பெயர்ந்தோர் விரும்பத்தக்கது 31-01-1994க்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 308
மே/பா ஈழநாதம்
31. மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/8432)



பண்டத்தரிப்பு பனை தென்னை வள
அபி. கூ. சங்கம்

## கூறுவிலை கோரல்

எமது சங்க பாவனைக்கு நல்ல நிலையிலுள்ள இரண்டு சில்லு உழவு இயந்திரம் (லாண்ட் மாஸ்ரர்) ஒன்று தேவையாக உள்ளது.

விண்ணப்பிக்க பொருத்தமானவர்கள் இயந்திரத்தின் வகை, இயந்திரத்தின் நிலை, கூறுவிலை என்பவற்றைக் குறிப்பிட்டு மூடப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால் மூலமோ, நேரடியாகவோ கீழ்க் காட்டப்பட்ட விலாசத்திற்கு 31-01-94க்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.


ஈழநாதம்

## 4-ம் ஆண்டு நிறைவு

### போட்டிகளும், விதிமுறைகளும்

ஈழநாதம் மக்கள் தினசரி நான்காவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக சிறுகதைப்போட்டி, கவிதைப்போட்டி என்பனவற்றை நடாத்த முன்வந்துள்ளது. இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

**சிறுகதை கவிதை**
**போட்டிகளில் கலந்து கொள்வோர் கடைப்பிடிக்கவேண்டியவை**

ஃ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல்வேண்டும்.

ஃ படைப்புகள் யாவும் தாளின் ஒருபக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

ஃ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல்வேண்டும்.

ஃ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்படவேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

ஃ ஆக்கங்கள் இதற்கு முன் பிரசுரமானதாகவோ வேறெங்கும் பிரசுரம் செய்வதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.

ஃ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் ஜனவரி 31ஆம் திகதிக்குப் பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்தில் சேர்க்கப்படவேண்டும். பிந்திக்கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

போட்டி முடிவுகள் யாவும் 17-02-1994 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.

இப்போட்டிகளில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் நான்காவது ஆண்டு நிறைவு விழா மலரில் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானவை எனத் தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்கள் ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும்.

முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு நான்காவது ஆண்டு நிறைவுநாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் ''ஈழநாதம் ஆண்டு நிறைவுப்போட்டி'' என கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு

ஆசிரியர்,
ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.


ஈழநாதம்

## 4-ம் ஆண்டு நிறைவு



அமரர்

**திருமதி இரத்தினவதி [வேலுப்பிள்ளை**

பூவுலகில் 31-08-1947

பொன்னுலகில் 09-12-1993

**திதி: 23.1.1994**

மறக்கஒண்ணா மனஈறல் வாழ்நாள் முழுதாக
அறக்கொடும் எறிகணைக்கு ஆளாகி மறைந்தனை
யோ
தருமம் தலைநின்ற தனியன்பே மறைபொழுதிற்
கருமாதி கழிப்பாரும் கண்ணில்விழிக்காது மறைந்
தனையோ

அமரரின் அந்தியேட்டி, சபிண்டீகரணக்கிரியைகள் 23-01-94 காலை நிகழும். உற்றார், உறவினர், அன்பர்கள் யாவரையும் அன்பாக அழைப்பதோடு, மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாகக் கோருகின்றோம்.

'வேலகம்'
குருக்கட்டு,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

இங்ஙனம்
அமரரின்தாயார், புத்திரர்,
புத்திரியர், சகோதரர்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

23-01-1994 (7295)

---

செய்வதற்கான இப்பொதுக் கூட்டத்தில் சங்கத்தைச்சேர்ந்த வர்த்தகர்கள் கடை உரிமையாளர்கள், அனைவரையும் தவறாது சமுகந்தருமாறு சங்கச் செயலாளர் க. ஸ்ரீமுருகன் தெரிவித்துள்ளார்.

(41)

---

பொதுமுகாமையாளர்
பண்டத்தரிப்பு பனை தென்னை
வள அபி. கூ. சங்கம்,
ஆஸ்பத்திரிக்கு அருகாமை
மானிப்பாய்.

(சி-8435)

---

அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

## பதவி வெற்றிடங்கள்

1. லொறிச் சாரதி
2. லொறிச் சுத்திகரிப்பாளர்

### விண்ணப்பங்கள் கோரல்

எமது சங்கத்தில் வெற்றிடமாக உள்ள பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அளவெட்டி, மல்லாகம் ப. நோ. கூ. சங்க தொழிற்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ 04-02-1994 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். விண்ணப்பப் படிவங்களை ரூபா 5|- செலுத்தி சங்க காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**1. லொறிச் சாரதி (தற்காலிகமானது)**

குறியீட்டு இல. 312|12
சம்பளத்திட்டம் — 255—12.50 x 8, 15 x 7—460|-
(அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)
கல்வித்தகைமை 8-ம் வகுப்பு சித்தி
வயது 30 தொடக்கம் 40 வரை

**2. லொறிச் சுத்திகரிப்பாளர் (தற்காலிகமானது)**

குறியீட்டு இல. 314|14
சம்பளத்திட்டம் — 195—10 x 10;, 12.50 x 4—345|-
(அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)
கல்வித்தகைமை அ. கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத் திட்டத்தில் ஒரு வருடம் கடமையாற்றிய அனுபவம்
அல்லது
ஆ. 8-ம் வகுப்பு சித்தி
வயது — 23 தொடக்கம் 40 வரை

விண்ணப்பப் படிவங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டு சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகள் (Photostat copy) விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்

அளவெட்டி, மல்லாகம்
பல நோக்குக் கூ. சங்கம்,
மருதனார்மடம், இணுவில்.

(சி | 8448)

---

மாணவர்களுக்கான
### கட்டுரைப் போட்டி

ஈழநாதம் மக்கள் தினசரி தனது நான்காம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியொன்றை நடாத்த முன்வந்துள்ளது.

தலைப்பு:
## "போராட்டத்திற்கான சிந்தனையை இன்றைய கல்வி ஊட்டுகிறதா?"

**போட்டி விதிகள்:**

- கட்டுரைகள் தாளின் ஒருபக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- கட்டுரையாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் கட்டுரையாளர் பாடசாலை மாணவர் என்பதும் அக்கட்டுரை அவருடைய சொந்த ஆக்கம் என்பதும் பொறுப்பு வாய்ந்த ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- போட்டிக்கான கட்டுரைகள் அனைத்தும் 1994 ஜனவரி 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் ஈழநாதம் அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.
- போட்டி முடிவுகள் 17-02-1994 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்
- இப்போட்டியில் முதலாவது பரிசுபெறும் கட்டுரை நான்காவது ஆண்டுவிழா மலரில் பிரசுரிக்கப்படும்.
- முதல் மூன்று இடங்களையும் பெறும் கட்டுரைகளுக்கு நான்காவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.
- கட்டுரைகள் அனைத்தும் 'ஈழநாதம் ஆண்டு நிறைவுப்போட்டி' என கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் குறிப்பிடப்பட்டு,

ஆசிரியர்,
ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரியிட்டு சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

அடர்த்தியான உரோமம் கொண்ட நாயின் தலை எது, வால் எதுஎன்று சொல்ல முடியாது போன்று இரண்டு பேர் கொண்ட இந்தக்கட்சியை எண்ணும் போதும் இருக்கின்றது,

— ஜோன் பிரைட்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 23-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05


## மக்கள் தேடுகின்றனர்

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள கட்சித்தாவல் / பாய்ச்சல் காரணமாக யார் யார் எந்த எந்தக் கட்சியில் இருக்கின்றார்கள், எந்த எந்தக் கட்சிக்கு வேலை செய்கின்றார்கள் என்பதைக் கண்டறிவதில் பெரும் குழப்பமான சூழ்நிலை ஒன்று உருவாகியுள்ளது. அரசியல்வாதிகள் அதிகாரத்திற்காகவும், பதவிக்காகவும் மேற்கொள்ளும் இந்நடவடிக்கைகள் ஜனநாயக அமைப்பு முறையையே கேலி செய்வதாகவும் மாறிவிட்டது.

தென்னாசியாவில் கட்சித்தாவலுக்கும் / பாய்ச்சலுக்கும் 'புகழ் பெற்ற' இந்தியாவின் நிலைமையையும் விட சிறிலங்காவின் இன்றைய நிலை கைமீறிவிட்டது போல் தெரிகின்றது. கட்சித் தாவலும் / பாய்ச்சலும் முன்னர் தேர்தலுக்குத் தேர்தல் என்ற நிலை மாறி தற்பொழுது நாளாந்தம் என்ற நிலைமை உருவாகியுள்ளது.

இந்நிலையில், ஒரு கட்சி, அதற்கென ஒரு கொள்கை என்பனவெல்லாம் கேள்விக்குரியதாகி விட்டன, அத்தோடு, அரசியல்வாதி ஒவ்வொருவருக்கும் ஒருகொள்கை என்ற நிலையும் உருவாகியுள்ளது. இதில், கொள்கை என்பதில் அதிகாரத்தையும், பதவியையும் கைப்பற்றுதல் என்பதைத் தவிர வேறு எதுவும் இருப்பதாக இல்லை.

இந்த வகையிலேயே, இன்று காமினி தலைமையில் இயங்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முன்னணித் தலைவர்கள் எடுத்துள்ள முடிவுகளைக் குறிப்பிடலாம். அதாவது, பிரேமச்சந்திரா ஐ. தே. கவுடன் இணைய எடுத்த முடிவும், காமினி திசநாயக்கவும் இணையலாம் என்பதும் ஆகும். ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பிரமுகர்கள் குறிப்பாக அதன் தலைவர் காமினி திசநாயக்கவும், செயலாளர் பிரேமச்சந்திராவும் கடந்த காலத்தில் தமது அரசியல் எதிர்காலம் குறித்துத் தடுமாற்றமுடனேயே இருந்தனர். கடந்த காலங்களில் பதவி அந்தஸ்துகளுடன் அதிகார பீடத்தில் இருந்த இவர்களால் அதைத் துறந்து இருக்க முடியவில்லை என்பதே இதற்குக் காரணமாகும்.

இந்நிலையில், ஏதாவது ஒரு வழியைப் பின்பற்றி அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்பதே அவர்களின் குறிக்கோளாக இருந்தது. இதற்கென சிறிலங்கா சுதந்திர கட்சி ஆயினும் சரி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி ஆயினும் சரி, ஐக்கிய தேசியக் கட்சி ஆயினும் சரி எவருடனும் கூட்டுச் சேரவும்...

# ஐ. தே. க. அரசு நியமிக்கும் கமிஷன் நியாயமான தீர்வைத் தராது

**- திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா**

(கொழும்பு)

இந்த அரசாங்கத்தினால்நியமிக்கப்பட்ட கமிஷன்எதுவும் நேர்மையான தீர்வைத் தரவில்லை. ஆகவேதான் லலித் அத்துலத் முதலியின் மரணத்தைப்பற்றி ஆராய கமிஷன் நியமிக்கும்படி அரசிடம் கோரிக்கை விடுவதில் அர்த்தமில்லை. இவ்வாறு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

லலித் அத்துலத் முதலியின் மரணத்தை யொட்டி அவரின் கொள்கைகள் தொடர்பாக விளக்கமளிக்க ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய திருமதி சிறிமாவோ மேலும் கூறுகையில் இந்த அரசின் ஆட்சிக்காலத்தில் எனது பிரஜா உரிமையைப் பறிப்பதற்காக நியமிக்கப்பட்ட கமிஷன் மட்டும்தான் ஒழுங்கான தீர்வைக் கொடுத்தது. கொப்பேகடுவ மரணம் பற்றி நியமிக்கப்பட்ட கமிஷனின் தீர்ப்புபற்றி உங்களுக்கும் தெரியும். ஆகவே இந்த அரசு ஆட்சியிலிருக்கும்வரை கமிஷன் நியமிக்கும்படி கோரிக்கை விடமாட்டேன்.

தென்மாகாணசபைத் தேர்தலில் நாங்கள் வெற்றிபெற்ற போதுங்கூட நீதிமன்றம் சென்றுதான் அதிகாரத்தைக் கைப்பற்றினோம். இப்போது மீண்டும் தென்மாகாணசபை கலைக்கப்பட்டுள்ளது. மீண்டும் தேர்தல் நடைபெறவுள்ளது. மக்கள் இதற்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும் என்றும் தெரிவித்தார். இக் கூட்டத்திற்கு மேல்மாகாண சபையின் டி. யு. என். எப். உறுப்பினர் எதிரிவீர பிரேமரத்தினா தலைமை தாங்கினார்.

## புங்குடுதீவு மகா வித். தனியாக செயற்படும்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்து 1992ம் ஆண்டிலிருந்து கந்தர்மடம் பகுதியில் தனியார் கல்வி நிலையம் ஒன்றில் இயங்கி வரும் புங்குடுதீவு மகா வித்தியாலயம் விரைவில், தனக்கென ஒரு தனி இடத்தில், இயங்கவுள்ளது. இவ் வித்தியாலத்திற்கென பிறவுண் வீதியில் காணி பெறப்பட்டு அதில் கொட்டகைகள் அமைக்கப்பட்டு விட்டன. தற்போது தளபாடங்களுக்கே நிதிதேவைப் படுவதாகவும், இந்நிதியைச் சேர்ப்பதற்கு கலை நிகழ்ச்சி ஏதாவதுநடாத்த ஆலோசிக்கப்பட்டுவருவதாகவும்மேற்படி வித்தியாலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (22)

### பொதுக் கூட்டம்

வீமன்காமம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப்பொதுக்கூட்டமும் கலந்துரையாடலும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணியளவில் இராமநாதன் கல்லூரியில் இருக்கும் வீமன்காமம்மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## பல்கலை மாணவருக்கு மக்கள் வங்கி கடன்வசதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளை அலுவலகம் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா வரையிலான கடன் வசதியளிப்பதற்கு விண்ணப்பங்களை வழங்கி வருகின்றது.

சுயதொழில் முயற்சிக்கான கடன் வசதிகள்பெற இறுதியாண்டு மாணவர்கள் தவிர்ந்த ஏனைய மாணவர்கள் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பதினையாயிரம் ரூபா வரையில் கடன்பெறும் மாணவர்கள் மாதாமாதம் எழுநூற்றி தொண்ணூறு ரூபா (790) வரை மீளளிப்பும், பத்தாயிரம் ரூபா கடன் பெறும்மாணவர்கள் மாதாந்தம் 625 ரூபா வரை மீளளிப்பும் செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை இவ் வங்கியின் இப்பகுதி பொதுமக்கள் தமது வங்கிச் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு வசதியாக தனியான கருமபீடம் அமைக்கப்பட்டுள்ளது யாழ். பல்கலைக்கழக வளவினுள் இவ் வங்கி அமைந்துள்ள போதும் இப் பகுதிப் பொது மக்கள், வர்த்தகர்கள் இந்த வங்கியின் சேவையை பெற்றுக் கொள்வதற்காகவே இந்த தனியான கருமபீடம் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அறிய வருகிறது. (05)

### இடமாற்றம்

வலி மேற்கு பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் மின் அத்தியட்சகராக கடமையாற்றிய திரு பொ. சண்முகானந்தசிவம் அவர்கள் தை மாதம் முதல் சங்கானை உப அலுவலகப் பொறுப்பதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார். (41)

### நவீன மயமாகிறது

சுழிபுரம், தொல்புரம் கிழக்கு பெரியதம்பிரான் சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்படும்பாலர் பாடசாலை தற்கால சூழ்நிலைக் கேற்ப நவீன மயப்படுத்தப்பட்டு பாலர்களுக்கு சிறந்த கல்வி வசதியை ஏற்படுத்தியுள்ளது.

மேற்படியாலர் பாடசாலையில் பிள்ளைகளை சேர்க்க விரும்பும் பெற்றோர் பாடசாலை ஆசிரியரிடம் அல்லது சனசமூக நிலையக் காரியதரிசியிடம் தொடர்பு கொள்ளுமாறுகேட்கப்படுகின்றனர்

## ஜெயலலிதாவின் கட்சி திராவிடக்கட்சியே அல்ல

**- வை. கோ தெரிவிப்பு**

(சென்னை)

ஜெயலலிதா தலைமையிலான ஊழல் அரசை இடதுசாரிக்கட்சிகள் மற்றும் ஜனநாயக சக்திகளின் துணை கொண்டு எதிர்ப்போம்என்று தி.மு.கவிலிருந்து வெளியேற்றப்பட்ட ராஜ்யசபா எம். பியான வை. கோபாலசாமி கூறியுள்ளார் நேற்று முன்தினம் திருச்சியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், ஜெயலலிதாவின் கட்சியை ஒரு திராவிடக் கட்சியாகவே தான்ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டார். அத்துடன் அயோத்தியில் நடைபெற்ற கரசேவையை ஆதரித்த ஜெயலலிதா தனது கட்சியை எப்படித்திராவிடக் கட்சி என்று அழைக்க முடியும் எனவும் கேள்வி எழுப்பினார்.

கர்நாடக மாநிலத்தில் தமிழர் பாதிக்கப்பட்டபோது நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு சபைக்கூட்டத்தில் ஜெயலலிதா கலந்துகொள்ளவில்லை எனினும் கர்நாடக முதல்வர் பங்காரப்பா அக்கூட்டத்தில் கலந்துகொண்டு தமிழ்நாட்டில் வாழும் கர்நாடக மாநிலத்தவரின் பாதுகாப்பிற்கு உறுதி மொழியைப் பெற்றுக் கொண்டார். எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய முன்னணித் தலைவர்கள் பற்றிய கேள்விக்கு பதிலளித்த அவர்தான் எதையும் தவறாக செய்யவில்லை என்பதை தேசிய முன்னணித்தலைவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாககுறிப்பிட்டார்.

## தமிழக மீனவர்மீது தாக்கு

# மட்டு. மாநகரசபை உறுப்பினர் கூட்டம் நடத்துவது எங்கே?

**மக்கள் மனத்தில் எழுந்துள்ள கேள்வி**

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாநகரசபை மற்றும் பிரதேச சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றபோதும் கூட மாநகரசபை உட்பட சில பிரதேச சபைகளுக்காக தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்கள் எங்கே கூட்டம் நடத்துவார்கள் என்ற கேள்வி அப்பகுதி பொதுமக்கள் மத்தியில் தற்போது எழுந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

ஏனெனில், மட்டக்களப்பு மாநகரசபைக் கட்டடத்தில் இராணுவ முகாமும், பிரிகேடியர் அலுவலகமும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர கூட்டம் நடாத்தக் கூடிய பெரிய கட்டடங்கள் மட்டக்களப்பு நகரத்தில் தற்பொழுது இல்லை. அத்தோடு, காத்தான்குடி, மற்றும் மண்முனைப்பற்று பட்டிப்பளை மண்முனை மேற்கு (வவுணதீவு) பிரதேச சபைக் கட்டடங்கள் இராணுவ நடவடிக்கைகளின் போது இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இதனால் இப்பிரதேச செயலகங்கள் தனியார் வீடுகளில் இயங்கி வருகின்றன.

இந்த நிலையில் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் எங்கே கூடுவார்கள் என்பது குறித்து பொதுமக்கள் மனத்தில் எழுந்துள்ள கேள்வியாகும்.

### குழாய்க்கிணறு அமைப்பு

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபையின் நான்கு உப அலுவலகப் பிரதேசப் பகுதிகளில் குடிநீர் வசதியை முன்னிட்டு குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுழிபுரத்தில் பண்ணாகம் சனசமூக நிலையத்திலும், சங்கானையில் தொட்டிலடி சனசமூக நிலையத்திலும், வட்டுக்கோட்டையில் சங்கரத்தை விளையாட்டு மைதானத்திலும், அராலியில் மேற்கு அராலி சனசமூக நிலையத்திலும் மொத்தம்...

### லயன்ஸ் கழக ஏற்பாட்டில் கண் பரிசோதனை

(தென்மராட்சி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் பார்வை குறைந்தோருக்கு கண்பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. சாவகச்சேரி வைத்திய சாலையில் இடம்பெற்ற இப்பரிசோதனையினால் சுமார் நூறு பேர் பயன்பெற்றுள்ளனர்.

குறிக்கோளாக இருந்தது. இதற்கென சிறிலங்கா சுதந்திர கட்சி ஆயினும் சரி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி ஆயினும் சரி, ஐக்கிய தேசியக் கட்சி ஆயினும் சரி எவருடனும் கூட்டுச் சேரவும், பேரம் பேசவும் அவர்கள் தயாராக இருந்தனர். லலித் - பிரேமதாசா ஆகியோர் மரணமடைந்த உடன் ஆரம்பித்த இவர்களின் பேரம் பேசலானது இன்று ஐ. தே. கட்சியுடன் இணைவுடன் நிறைவு பெறுகின்றதென்றே கூறலாம்,

ஆனால், கடந்த ஒரு மாதத்தின் முன்னர் இவர்களின் அரசியல் நிலை இவ்வாறு இருக்கவில்லை. கட்சியின் தலைவர் காமினி திசாநாயக்கா எதிரணியுடனும், தொண்டமானுடனும் சேர்ந்து ஐ. தே. கட்சியின் கீழ் இருந்த மத்திய மாகாண சபை ஆட்சியைக் கலைப்பதற்குத் தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். - பிரேமச்சந்திரா இவ்விடயத்தில் ஒதுங்கியிருந்தார் - இதன் காரணமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிளவு பட வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இதில், வேடிக்கையானதும், வருந்தத்தக்கதுமான அம்சம் என்னவென்றால், அமைச்சர் தொண்டமான் எதிர்காலம் குறித்து தெளிவான கொள்கையை காமினி திசாநாயக்க கொண்டுள்ளார் என 'நற்சான்றிதழ் பத்திரம்' வழங்கியமையாகும்.

இதேவேளை, காமினி திசாநாயக்காவிற்கு அதிர்ச்சியூட்டும் சம்பவமாக அமைந்திருக்கக் கூடியது தமது கட்சியின் செயலாளர் பிரேமச்சந்திரா தன்னை முந்திக் கொண்டு ஐ. தே. க வில் இணைய முடிவு செய்தமையாகும். சில தினங்களுக்கு முன் காமினியும், பிரேமச்சந்திராவும் ஐ. தே. க வில் இணையவுள்ளனர் எனப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டபோது காமினி திசநாயக்கா விடயம் பரிசீலனையில் உள்ளது போன்று மௌனம்சாதித்தார். ஆனால், பிரேமச்சந்திரா அவ்வாறு எதுவுமில்லை என மறுத்திருந்தார். ஆனால், இரு தினங்களுக்குள் பிரேமச்சந்திரா ஐ தே. கவில் இணைவதாக காமினியை முந்திக்கொண்டு அறிவித்தமைஅதிர்ச்சியைக் கொடுக்காமல் வேறு எதைக் கொடுத்திருக்க முடியும்?

இவ்வாறாக, அரசியற் கட்சித் தலைவர்கள் அதிகாரத்திற்கும், பதவிக்கும் ஆலாய்ப் பறக்கும் நிலையானது, சிறிலங்கா அரசியல்வாதிகள் பெருமையாக பேசிக் கொள்ளும் ஜனநாயக ஆட்சி அமைப்பை அவர்களே அவமதிப்பது போன்றதாகும். ஆனால், அதனையே அவர்கள் தமது ஜனநாயக உரிமை எனக் கூறிக்கொள்ளவும் கூடும். ஆனால், அவர்கள் எதைக் கூறிக்கொண்டாலும், கவலை தரும் விடயமாக இருக்கப் போவது தாம் தெரிவு செய்த உறுப்பினர்கள் எந்தக் கட்சியில் இருக்கின்றனர் எனத் தேட வேண்டிய அவலம் சிறிலங்கா வாழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளமைதான்.

# தமிழக மீனவர் மீது தாக்கு இந்தியா கடும் கண்டனம்

கடலில் மீன்பிடிக்க செல்லும் தமிழக மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படை துப்பாக்கிச் சூடு நடாத்தியிருப்பது தொடர்பாக இந்திய அரசு சிறிலங்காவை கடுமையாக கண்டித்துள்ளது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் நரேஸ்வர் தயாள் சிறிலங்காவின் வெளியுறவுச் செயலாளருடன் தொடர்பு கொண்டு இந்தியாவின் கண்டனத்தைத் தெரிவித்தார்.

அண்மையில் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டமைக்கு தொடர்பாக ஆழ்ந்த வருத்தம் தெரிவித்ததாகவும், இனிமேல் இத்தகைய சம்பவங்கள்நிகழாமல் தடுக்க கடற்படையினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் தூதுவரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

16ம் திகதி நடந்த சம்பவத்தில் இந்திய மீனவர் நால்வர் காயமுற்றதும், மற்றுமொரு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

# ஆளுநருடன் மோதல் தமிழக அரசு தவிர்க்குக

## பாலசுப்பிரமணியம் வேண்டுகோள்

(சென்னை)

ஆளுநருடன் கருத்துமோதலில் ஈடுபடாமல் அவரது முதிர்ந்த அனுபவங்களை தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்று தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர்.பாலசுப்பிரமணியம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னையில் நேற்று மாலை செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் குடியரசு நாளில் மாநில அமைச்சர்கள் தேசிய கொடியை ஏற்றுவார்கள் என்று தமிழக அரசு அறிவித்திருந்ததையும் சுட்டிக்காட்டினார். அத்துடன் பேரவைத் தலைவர் போன்ற பதவிகள் அனைவருக்கும் பொதுவானது அதனை மாநில அமைச்சர்களின் பட்டியலோடு சேர்த்து அச்சிடுவது தவறானது எனவும் தெரிவித்தார்.

## சந்தனமரக் கடத்தல், பொலிசார் துப்பாக்கிச்சூடு

(சென்னை)

தமிழ்நாட்டில் பெரியார் மாவட்டத்தில் சந்தனக் கட்டைக்கடத்தலில் ஈடுபட்டகும்பலை நோக்கி அண்மையில் பொலிசார் சுட்டதில் ஒருவர் இறந்து விட்டார். நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்,

சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனைத் தேடிப் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் போது இந்தக் கடத்தல் கும்பல் தென்பட்டதாக சிறப்புதபணியின் தலைவர் திரு. சஞ்சை அரோரா தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகரத்தில் தற்பொழுது இல்லை. அத்தோடு, காத்தான்குடி, மற்றும் மண்முனைப்பற்று (ஆரையம்பதி) பிரதேச சபைக் கட்டடங்களில் பிரதேச செயலகங்கள் இயங்கி வருகின்றன. அத்துடன் கோறளைப்பற்று வடக்கு (வாகரை) போரதீவுப்பற்று,ளர்.

ரத்தை விளையாட்டு மைதானத்திலும், அராலியில் மேற்கு அராலி சன சமூக நிலையத்திலும் மொத்தம் நான்கு குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இக் குடிநீர் வசதிச் சேவையினால் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பயனடைந்துள் (41)

இடம்பெற்ற இப்பரிசோதனையினால் சுமார் நூறு பேர் பயன்பெற்றுள்ளனர்; இதன் அடிப்படையில் சுமார் பத்துப்பேருக்கு பெப்ரவரி மாத நடுப்பகுதியில் கண்ணின் வெண்படல சத்திர சிகிச்சை (கற்றக் ஒப்பறேசன்) மேற்கொள்ளப்படவுள்ளது (86)

# நாம் தூக்கி வளர்த்தவர்களே எம்மைத் தூக்கி எறிகின்றனர்

## கருணாநிதி ஆதங்கம்

யாரை எல்லாம் நான்தம்பி என்று அழைத்தேனோ, என் உடன் பிறவா சகோதரன் என்று கருதினேனோ, யார் யாரெல்லாம் என்னை மட்டுமல்ல இந்த இயக்கத்தையும் காப்பாற்ற துணையாக இருப்பார்கள் என்று நம்பி பெரிய இடங்களுக்கு எல்லாம் அனுப்பினேனோ, யாரை நம்பினால் நலமாய் நம்பிக்கையாய் இருக்கும் என்று நம்பி அமைச்சர்கள் ஆக்கினேனோ அவர்களை எல்லாம் என் கையாலேயே நான் வெளியே அனுப்பிவைக்க வேண்டிய நிலை வந்துவிட்டதே என்று தான் எனக்குள் வருத்தம். ஆனால் அந்த வருத்தம் அவர்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. தூக்கி எறிந்து விட்டார்கள் எங்களை இவ்வாறு தி.மு.க தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

தஞ்சை திலகர் திடலில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலே உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்நான் தூக்கி வளர்த்தவர்கள்ளல்லாம் இன்று எங்களை எல்லாம் தூக்கி எறிந்திருக்கிறார்கள் அதுஅவர்கள் எங்களுக்குதந்த பரிசு.ஆனால் ஒன்று மட்டும் உறுதி தி.மு.கவை இரண்டாக பிளக்கவும் முடியாது அதனை யாராலும் உடைக்கவும் முடியாது. அடிமுதல் நுனிவரை ஜனநாயக ரீதியில் உள்ள கட்சியான தி·மு கவைத் தவிர வேறு எதனையும்காட்ட முடியுமா?

தலைமை பதவிக்கு என்று ஏன் இப்போது போட்டிஎழுந்துள்ளது? அண்ணா உயிரோடு இருந்த வரை நானோ நாவலரோ தலைமையைக் கைப்பற்ற எண்ணியது உண்டா?

மன்னையிலே தி. மு க பொதுக்கூட்டம் நடைபெற்ற போது பேரறிஞர் அண்ணா அதில் கலந்து கொண்டு பேசினார். அவர் பேசி முடிந்ததும் செல்லவேண்டிய சூழ்நிலை. எனவே அவருக்குப் பின் என்னை பேச அழைத்தனர் நான் அவரிடம் எப்படியண்ணா இது முடியும் என்றேன். அவர் உடனே நான் தி. மு. கவின் முதல் அத்தியாயத்தை எழுதினேன் தம்பி கருணாநிதி அடுத்த அத்தியாயத்தை தொடர்வார்என்றார். நான்உடனே அடுத்த அத்தியாயத்தை தொடங்கி விட்டேன் என்று சொல்லி சுவரொட்டிகள் ஒட்டவில்லையே. கழகத் தேர்தலில் தோற்றவர்களை வைத்து தனியாக ஒரு கூட்டம் நடத்தவில்லையே எனவும் தெரிவித்தார்.

# வை கோ. கள்ளத்தோணி கழகத்தைவீழ்த்தமுடியுமா?

அறிவாலயத்தை நோக்கி ஒருலட்சம் பேர் புறப்பட்டால் புறப்பட்ட இடத்திலேயே 39 லட்சம் பேருடன் தடுத்து நிறுத்துவோம். இவ்வாறு முன்னாள் அமைச்சர் காளிமுத்து கூறியுள்ளார்.

கரூரில் நடைபெற்ற தி. மு. க. பொதுக்கூட்டத்தில் தி. மு. க இலக்கிய அணிச் செயலாளர் காளிமுத்து கலந்துகொண்டு பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது தி. மு. கழகத்தை வீழ்த்த நினைத்த துரோகிகள் ஆப்பு அசைத்த குரங்கு போல் வகையாக சிக்கியுள்ளனர். எத்தனையோ பீரங்கி வீரர்களால் கழகத்தை வீழ்த்த முடியவில்லை. இந்த வெண்ணை வெட்டி சிப்பாய்களும், வெங்காய வெடிகளும், வெத்து வேட்டுக்களும் கழகத்தை எதுவும் செய்துவிட முடியாது. கப்பற்படை வைத்துள்ள மத்திய அரசு கூட கழகத்தை பிளக்க முயன்று தோல்வி கண்டது வரலாறு. இந்த கள்ளத் தோணி கோபாலசாமியால் கழகத்தை வீழ்த்தமுடியுமா? என்றார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின்

# தேசிய நிர்வாக சபை கூட்டங்களுக்கு நீதிமன்றம் தடை விதிப்பு

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதனது தேசிய சபை மற்றும் நிர்வாக சபை என்பவற்றின் கூட்டங்களை நடத்துவதற்கு, ஜனவரி 28-ம் திகதிவரை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

இ.தொ.கா வின் பொதுச் செயலாளர் எம்.எஸ். செல்லச்சாமி தாக்கல் செய்த இடைக்காலத் தடையுத்தரவு கோரும் மனு மீதான நீதிமன்ற விசாரணையின் போது நீதிபதி மகாநாம திலகரட்ணா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

செல்லச்சாமி சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், இ.தொ.கா வின் யாப்புக்குமுரணாக ஏ.எம்.டி இராஜன் ஜனவரி 2-ம் திகதியன்று தேசிய சபையையும் நிர்வாக சபையையும் கூட்டினார். இந்த தேசிய சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப் பட்ட தீர்மானங்கள் அமுல் படுத்தப்படுவதற்கு நீதிமன்றம் ஜனவரி 17-ம் திகதிவரை இடைக்காலத்தடை விதித்து இருக்கிறது.

இந்த நிலையில் தேசிய சபையையும் நிர்வாக சபையையும் கூட்டுவதற்கு பிரதிவாதிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மனுதாரரைபதவியிலிருந்துநீக்குவதைநோக்கமாகக் கொண்டே இக் கூட்டம் கூட்டப்படுகிறது. எனவே இந்தக் கூட்டத்திற்கு நீதிமன்றம் தடை விதிக்க வேண்டும் எனவும் அவ்வாறு செய்யாத இடத்தில் ஜனவரி 3 இல் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத் தடையுத்தரவு பயனற்றதாகி விடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டு இருக்கின்றது.

## மாணவிக்கு பாராட்டு

(நல்லூர்)

யாழ். மங்கையர்க்கரசி வித்தியாலய மாணவி கந்தசாமி விஜேந்தினி கண்டெடுத்த தங்கச் சங்கிலி அதன் உரிமையாளரிடம் மேற்படி வித்தியாலய அதிபரால் கையளிக்கப்பட்டது. மாணவி, கண்டெடுத்த தங்கச் சங்கிலியை மேற்படி வித்தியாலய அதிபரிடம் ஒப்படைத்திருந்தார். பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரன் முன்னிலையில் இந்தச் சங்கிலி கையளிக்கப்பட்டது. இதேவேளை இந்த மாணவியைப் பாராட்டி அன்பளிப்பு வழங்கும் வைபவம் பாடசாலையில் நாளை நடைபெறவுள்ளது.

# இடதுசாரிகளின் இரட்டைவேடமே இனப்பிரச்சினைக்குக் காரணம்

## ஒஸி அபய குணவர்த்தனா தெரிவிப்பு

(கொழும்பு)

சகல சமூகங்களுக்கும் நீதி வழங்குவதுதான் சிறிலங்கா மக்கள் கட்சியின் நோக்கமாகும். பொதுமக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக அந்தக் கட்சி உருவாக்கப்பட்டது என்று வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன குரே தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா மக்கள்கட்சியின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் அவர் உரையாற்றினார். இவ்வைபவம் கொழும்பு விகாரமாதேவி பூங்கா திறந்தவெளி அரங்கில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

தொடர்ந்து பேசிய அமைச்சர், இனப்பிரச்சினையில் மக்களின் முடிவு பாராட்டத்தக்கது என்று குறிப்பிட்டார். சிறிலங்கா மக்கள் கட்சி அதன் கொள்கைகளுக்குப் பாதகம் ஏற்படுத்தாமல் அரசு மேற்கொண்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவி அளித்து வந்திருக்கின்றது.

கட்சித்தலைவர் ஒஸி அபய குணவர்த்தனா பேசும்போது சகல சமூகங்களுக்கும் நீதி கிடைக்கக்கூடிய வகையில், எமது கட்சி ஜனநாயக அடிப்படையில் செயற்படும். இதே அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் என்றார். இடதுசாரிக்கட்சிகள் இரட்டை வேடம்போட்டதாலேயே இனப்பிரச்சினை ஏற்பட்டது என்றும் அவர்குறிப்பிட்டார்.

இந்திய குடியரசு தினத்தன்று

# குண்டுத் தாக்குதல் நடத்த முயற்சித்த மூவர் கைது

(டில்லி)

இந்திய குடியரசு தினக் கொண்டாட்டத்தின் போது குண்டுகளை வெடிக்கவைக்கவும் மதக் கலவரங்களைக் கட்டவிழ்த்து விடவும் திட்டமிட்டதாக மூன்று முஸ்லிம்கள் இந்தியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எதிர் வரும் 26-ம் திகதி நடைபெறவிருக்கும் இக் குடியரசு தின கொண்டாட்டங்களின் போதே இக் குண்டு வெடிப்புக்கள் நடாத்தப்பட இருந்ததாக பொலிசார்தெரிவித்தனர்.

இஸ்லாமிய அடிப்படைவாதக் குழு ஒன்றைச் சேர்ந்தஇவர்களைப் பாகிஸ்தான் தெரிவு செய்ததாகவும் அயோத்தி மசூதி அழிக்கப்பட்டதற்கு பழி வாங்கும் முகமாக இத் தாக்குதல் ஒழுங்கு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாயன்று இவர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து பொலிசார் நடாத்திய தேடுதலில் 330 இறாத்தல் வெடிப் பொருள்களை தாம் கைப்பற்றியிருப்பதாகவும் இவை பாகிஸ்தானினால் வழங்கப்பட்டிருந்ததாகவும் பொலிசார் கூறுகின்றனர்.

அயோத்தி மசூதி இடிப்பின் முதலாவது ஆண்டு நினைவு தினத்தில் 4 ரயில்களில் இடம் பெற்ற குண்டு வெடிப்பிற்கும் இவர்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

## ஆதாரம் காட்டிப் பெறலாம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் அநாதரவாகக் கைவிடப்பட்டிருந்த இரு துவிச்சக்கர வண்டிகள் சாவகச்சேரிப் பகுதி தமிழீழ நீதிமன்றில் கடந்த பல மாதங்களாக இருப்பதாகவும், அவற்றின் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் நீதியாளர் பூவேந்தன் தெரிவித்துள்ளார். (86)

# மோட்டார் ஊர்தி பதிவு வன்னி செயலகம் திறப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தின் வன்னி அலுவலகம் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

வன்னி மாவட்ட துணைத் தளபதி கரன் அவர்களால் இவ் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவுப் பொறுப்பாளர் செந்தாளன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தை வன்னி பெருநிலப்பரப்பின் நீதிநிர்வாகத்துறைப்பொறுப்பாளர் சாந்தன் மங்கள விளக்கேற்றி வைத்து ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து வாகனங்களின் பதிவிற்கான விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டன.

# காரைநகர் கம்பன் கழகம் நடாத்தும் விழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கம்பன் கழகம் நடாத்தும் கம்பன் விழாவில் இன்றைய நிகழ்ச்சிகளாக காலையில் கம்பன்இசையமுது மற்றும் சுழலும் சொற்போர் ஆகிய நிகழ்வுகள் நடைபெறும். காலை நிகழ்ச்சிகளுக்குச் சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமை வகிப்பார்.

மாலை நிகழ்ச்சிகள் கலைப் பீடாதிபதி பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும். இதில் க்வியரங்கம், வழக்காடு மன்றம் என்பவை நடைபெறவுள்ளன.

லக்னோ கிரிக்கட் டெஸ்ட்

# இந்தியாவிடம் சிறிலங்கா இனிங்ஸால் தோல்வி

(டில்லி)

லக்னோ கிரிக்கட் டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா சிறிலங்காவை ஒரு இனிங்ஸ் 119ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றுள்ளது. 7விக்கெட்டுகள் இழப்புக்கு 197ஓட்டங்கள் என்ற நிலையில் நான்காம் நாளான நேற்று தனது முதல் இனிங்ஸைத் தொடர்ந்து ஆடிய இலங்கை அணி மொத்தம் 218ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தொடர்ந்து ஆடியது.

சிறிலங்கா இரண்டாவது இனிங்சிலும் 174ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வி உற்றது.

இந்தியா முதல் இனிங்ஸ் 511ஓட்டங்கள், சிறிலங்கா முதல் இனிங்ஸ் 218ஓட்டங்கள், இரண்டாவது இனிங்ஸ் 174ஓட்டங்கள்.

# தப்பி ஓடிய சிப்பாய்க்கு கொலையுடன் தொடர்பு

முகாமிலிருந்து தப்பி ஓடிய இராணுவ சிப்பாய் ஒருவர் பொலிஸ் அதிகாரி ஒருவரால் கைது செய்யப்பட்டு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் கட்டுகஸ்தோட்ட பொலிஸ் பிரிவில் இடம் பெற்றது.

ஹரிஸ்பத்துவ வைத்திய மாணவர் ஒருவரின் மர்ம மரணம் தொடர்பாக இவர் விசாரிக்கப்பட்ட பொழுது இவர் படையிலிருந்து தப்பி ஓடி வந்தவர் எனத் தெரிய வந்தது.

விசாரணையின் போது அவர் இராணுவத்திலிருந்து தப்பி ஓடி வந்தவர் என்பதை ஒப்புக்கொண்டதை அடுத்து விசாரணையைமேற்கொண்ட பொலிஸ் அதிகாரி அவரை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தார்.

# சர்வோதய ஊழியருக்கு எட்டு மாதம் ஊதியமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சர்வோதய தொண்டர் ஊழியர்களுக்கு சுமார் எட்டு மாதங்களுக்கு மேலாக ஊதியம் எதுவும் வழங்கப்படவில்லை என தெரிய வருகிறது.

இந் நிறுவனத்தில் பணிபுரியும் நூறுக்கு மேற்பட்ட தொண்டர் ஊழியர்கள் இதனால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர் என சம்பந்தப்பட்டோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இங்கு பணிபுரியும் மூன்று அதிகாரிகளுக்கு மட்டுமே ஊதியம் அனுப்பிவைக்கப்படுவதாக மேலும் தெரியவருகிறது.

## சிறுமி காயம்

மட்டுவில் பொன்னம்மான் குடியிருப்பில் குப்பி விளக்கில் படித்துக் கொண்டிருந்த சிறுமி ஒருத்தி விளக்கு தட்டுப்பட்டு வீழ்ந்ததால் தீக்காயங்களுக்கு உள்ளானார். பே.வினோதினி (வயது 05) எனும்சிறுமியே இவ்வாறு காயங்களுக்கு உள்ளானவர் ஆவார்.

ஆயுர்வேத மருந்துச்சாலைக்கு

# 85ஆயிரம் பெறுமதியான மருந்துகள் கொள்வனவு

(தொல்புரம்)

மானிப்பாய் வலிதென் மேற்கு பிரதேச சபையினால் நடாத்தப்படும் இலவச சித்த ஆயுர்வேத மருந்துச் சாலைகளுக்கு நடப்பு ஆண்டிற்கான மருந்துத் தேவைகளுக்காக 85 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த மருந்து வகைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

ளின் நலனைக் கருத்தில் கொண்டு மணிமேகன் சனசமூக நிலையக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் மேலும் ஓர் இலவச வைத்திய சேவை இயங்கி வருகின்றது, இவ் இரு மருந்துச் சாலைகளிலும் சேவைகளை விஸ்தரித்ததின் பயனாக இரு வைத்தியர்கள் சேவையாற்றிவருகின்றனர், இதனால் பெரும்பாலான

மனித முன்னேற்ற நடுநிலை பணியக

# சமூகநல பணிகள் குறித்த திட்டங்கள் தயார்

(யாழ்ப்பாணம்)

தாக்குதல்களால் ஊனமுற்

## உதைபந்தாட்டம்


# பாடசாலை பஸ் சேவை

மூளாய் இருந்து யாழ்ப்பாணம்

ஆரம்பம்: 03-01-94

பாடசாலை மாணவர்களின் நன்மைகருதி தினசரி மூளாயில் காலை 6-40 மணிக்கு புறப்படும் பாடசாலை பஸ்சேவை காலை 8-00 மணியளவில் சுண்டுக்குளி சந்தியை வந்தடையும். பிற்பகல் 2-00 மணியளவில் (பாடசாலை முடியும்நேரம்) சுண்டுக்குளியில் இருந்து புறப்பட்டு மூளாயைச் சென்றடையும்.

பாடசாலை மாணவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் இந்த பஸ்சேவை நடைபெறுகிறது.

(யாழ்ப்பாணம்)

யாழ்., கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் மனித முன்னேற்ற நடுநிலையப் பணியகத்தினால் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவிருக்கும் நிவாரண புனர்வாழ்வு மற்றும் சமூக நலப்பணிகள் குறித்த புதிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டுவருகிறது.

புதிதாகத் தயாரிக்கப்பட்டு வரும் மேற்படி வருடாந்த திட்டம் மிக விரைவில் மேற்படி நிறுவனத்தின் கொழும்பு தலைமை அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

நிவாரண உதவிகள் வழங்கும் திட்டம் புனர்வாழ்வு மற்றும் சுயதொழில் முயற்சிக்கான திட்டங்கள், உறவினர்களை இழந்த சிறுவர்களுக்கான பராமரிப்புத் திட்டங்கள், விதவைகளுக்கான உதவித்திட்டங்கள், சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான உதவித் திட்டங்கள், மருத்துவ உதவி வழங்கும் திட்டங்கள், இராணுவத் தாக்குதல்களால் ஊனமுற்றோர் மற்றும் காயமுற்றோருக்கான உதவித் திட்டங்கள் ஆகியனவற்றை உள்ளடக்கியே இவ்வருடத்துக்கான புதிய திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

இத்திட்டம் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதும் அதற்கான நிதி ஒதுக்கீடு பெற்றுக்கொள்ளப்படும். அதன்பின்னர் மேற்படி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

(க), (கி), (நி)

## உதைபந்தாட்டம்

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் வலய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு மல்லாகம் பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவற்குழி விளையாட்டுக்கழகம் மோதும்.

# முத்திரை தருவிப்பதற்கு காணிப்பதிவாளர் முயற்சி

யாழ்ப்பாண மாவட்டத்தில் சட்டத்தரணிகள் தமக்கு தேவையான முத்திரைகள் பற்றிய விபரத்தை உடன் அறியத்தருமாறு காணிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

முத்திரைகள் இன்மையால் காணிப்பதிவிற்குரிய உறுதிகள் பூரணமாக்கப்படாத நிலையைப் போக்குவதற்காக காணிப் பதிவாளரும், யாழ். அரசாங்க அதிபரும் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர். எனவே சட்டத்தரணிகள் தமக்குத் தேவையான முத்திரைகள் பற்றிய விபரத்தை உடனடியாக அறியத் தரும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

22-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 350

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9895, 22-3088, 41-8432, 26-6526, 26-9283
26-7627, 26-5202, 42-1320, 42-3927, 24-5509
42-3945, 24-0407, 40-2829, 26-2585.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-6579, 26-3582, 24-5734, 24-9938, 24-4207
26-9186, 27-1375, 26-1169, 26-7663, 24-7992
28-3476, 24-3594, 26-6796, 28-6748, 26-5814
24-6211 42-3329.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

### 35பாடசாலை

சேதமாக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு மன்னார் மாவட்டத்தில் கல்வி வளர்ச்சிக் கழகங்களை உருவாக்கிச் செயற்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### மூன்னாள்

லப்பட்டதாக தெரியவருகின்றது. கொல்லப்பட்டவரின் மகள் இராணுவத்தில் சேவையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பிரதேசசபை ஆனைக்கோட்டை உப அலுவலகத்தில் இயங்கிவந்த பிரதான மருந்துச் சாலையின் இலவச வைத்திய சேவையுடன், சண்டிலிப்பாய் மக்க

### வடக்கு

நாம் அனைவரும் ஒன்றிணைந்தே செயற்படமுடியும்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தனது ஆட்சிக்காலத்தில் வடக்கு - கிழக்கு பிரச்சினையைத் தீர்த்துவைப்பதாகத் தெளிவாகக்கூறியுள்ளார் இதற்கான நடவடிக்கைகள், மாற்றங்களை ஏற்படுத்திவருகிறார்

இதில் வெற்றி எமது பக்கம் இருக்க வேண்டுமானால் நாம் அவரையும் அவரது அரசாங்கத்தையும் பலப்படுத்த வேண்டும்.

மற்றைய தலைவர்களைப் போல வடக்கு கிழக்கில் யுத்தத்தை ஒத்தி வைத்துக் கொண்டு தமது ஆட்சியை நடத்த அவர் விரும்பவில்லை. யுத்தம்செய்வதைப் போன்று பாசாங்கு செய்வதை அவர் எதிர்க்கின்றார். முழுமையான யுத்தத்தைச் செய்ய வேண்டும் என்பதையே அவர் எதிர்பார்க்கின்றார், எனவே இதுவே இன்று எமக்குத் தேவை என்றார்.

இன்று இந்த நாட்டின் ஜனநாயகத்தை மதிக்கும் ஒரு தலைவர் டி. பி. விஜேதுங்காவே. வடக்கு கிழக்கு யுத்தம் தொடர்பாக பலரிடமும் கலந்தாலோசனை செய்தே இவர் முடிவெடுத்துள்ளார்.

சர்வாதிகார முறையில் முடிவெடுக்கக் கூடிய நிலையில் சகல அதிகாரங்களும் இருந்த போதும் ஜனநாயகத்திற்கு மதிப்புக் கொடுத்து இவர் எடுத்த முடிவு பாராட்டக் கூடியது என்றார்.

பயனாக இரு வைத்தியர்கள் சேவையாற்றிவருகின்றனர், இதனால் பெரும்பாலான நோயாளிகள் பயனடைந்து வருகின்றனர். இம் மருந்துச் சாலைகளுக்கான மருந்து வகைகளை வலி தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் தளபாடம், உபகரணங்கள் போன்ற அவசியமான பொருள்கள் மருந்துச் சாலைகளுக்கு வாங்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (41)

### உதவிப்பணக் கொடுப்பனவு

1993 கார்த்திகை மார்கழி மாதங்களுக்கான பொதுசன மாதாந்தஉதவிப்பண கொடுப்பனவு பெறும் புங்குடுதீவு, வேலணை, நயினாதீவு பகுதிகளை சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் மத்திய தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கும் வேலணை புங்குடுதீவு தபாலகங்களில் இக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளுமாறும் கெற்பலி முகாமில் வசிக்கும் மேற்படி கொடுப்பனவைப் பெறுவோர் விடத்தற்பனை உடுத்தால் அலுவலகத்தில்கொடுப்பனவைப் பெறுமாறும் வேலணை பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

### வை-12

தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள பிரதான இராணுவ முகாம்களுக்கு உணவு மற்றும் பொருள்களை விநியோகம் செய்துவந்த இவ் விமானம் இவ்வாறு சேதமடைந்ததால் இவ் இராணுவ முகாம்களுக்கான விநியோகத்தைத் தொடர புதிய விமானமொன்றைவாடகைக்குப் பெறவேண்டி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


யில் இருந்து புறப்பட்டு மூளாயைச் சென்றடையும்.
பாடசாலை மாணவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் இந்த பஸ்சேவை நடைபெறுகிறது.

**பாடசாலை பஸ் புறப்படும் நேரம்**

மூளாய் காலை 6-40 சித்தங்கேணி காலை 7-00
சண்டிலிப்பாய் காலை 7-15 கட்டுடை காலை 7-20
மானிப்பாய் காலை 7-25 ஆனைக்கோட்டை காலை 7-30

**பஸ்வண்டி இலக்கம் உ 4491**

**பாதை இலக்கம் 782**

பஸ்வண்டியின் பெயர்:

**சேப்ரி பாடசாலை சேவை**

மாணவர்கள் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

(1) றெமிங்டன் கல்வி நிலையம் சுழிபுரம்
(2) பாரதி கல்வி நிலையம் சித்தங்கேணி
(3) தெய்வேந்திரம் தேநீர்க்கடை சங்கானை (பஸ்நிலையம் அருகாமை)
(4) மணிமேகன் கல்வி நிலையம் சண்டிலிப்பாய்
(5) லக்கி கல்வி நிலையம் கட்டுடைச் சந்தி
(6) விஸ்கம் கூல் ஸ்பொட் மருதடிப்பிள்ளையார் கோவிலடி, மானிப்பாய்
(7) சுவிமா பேக்கவுஸ் மானிப்பாய்

நேரடி முகவரி:

**சேப்ரி பாடசாலை பஸ் சேவை**
விதானையார் வீதி, சுண்டுக்குளி.

**பஸ் கட்டண விபரம்:** (ஒரு மாதத்திற்கு)

மூளாய், சங்கானை முதல் யாழ்ப்பாணம் வரை ரூ. 300
சண்டிலிப்பாய், கட்டுடை முதல் யாழ்ப்பாணம் வரை ரூ. 250
மானிப்பாய் முதல் யாழ்ப்பாணம் வரை ரூ. 200
ஆனைக்கோட்டை முதல் யாழ்ப்பாணம் வரை ரூ 150
மூளாய் முதல் மானிப்பாய் வரை ரூ. 150

இந்த பஸ்சேவை சகல பாடசாலைகள் ஊடாகவும் செல்லும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

(7312) சேப்ரி பாடசாலை பஸ் சேவை